# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු






Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 15.07.2024 திங்கட்கிழமை இதழ் : 197 பக்கங்கள் : 12


# சஜித்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்!

## அரசை கோருகிறது ஐக்கிய மக்கள் சக்தி



**கொழும்பு, ஜூலை 15**

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் பாதுகாப்பு தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான டொனால்ட் ட்ரம்ப்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு தேவையான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி படுகொலை

11

# பிரபாகரனின் நிலையிலேயே இன்று ரணிலும் இருக்கிறார்!

## தயான் ஜயதிலக கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 15

கிளிநொச்சி வீழ்ச்சிக்கு பின்னர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு அடுத்த கட்டம் குறித்து சிந்திப்பதற்கு அவகாசம் இருக்கவில்லை. இந்த நிலைமையிலேயே தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் உள்ளார் என்று கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த அனைத்து செயல்பாடுகளும் எதிர்மறையான முடிவுகளை அளித்துள்ளன. இந்த நிலையில் அவரால் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பது குறித்து சிந்திப்பதற்கான அவகாசமற்ற நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக பாராளுமன்றத்தின் ஊடாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் அன்றைய தினம் மாலையில் ஜனாதிபதி செயலகத்தில் கூட்டமொன்றை நடத்தினார்.

11

# அரசாங்கம் மீதான நம்பிக்கை உயர்வு!

## ஆய்வில் வெளியானதாம்

கொழும்பு, ஜூலை 15

அரசாங்கத்தின்மீதான மக்களின் நம்பிக்கை 4 மாதங்களுக்கு முன்னர் இருந்ததைவிட மூன்று மடங்கு அதிகரித்துள்ளது என்று வெரிட்டே ரிசேர்ச் என்ற ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 7 வீதமாக இருந்த

11

# ஜனாதிபதி தேர்தலுக்கு ரூ. 1,000 கோடி ஒதுக்கீடு!

## நிதி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

ஜனாதிபதித் தேர்தலுக்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் செலவினங்களுக்காக தேவைப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதியை விடுவிக்க இயலும் என்று நிதி அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

11

# மகிந்தவை ஆட்சிக்கு கொண்டுவர ஜே. வி. பி. வாக்குகளை திரட்டியது!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வர வாக்குத் திரட்டும் திட்டத்தை ஜே. வி. பி. தரப்பினரே முன்னெடுத்தனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

களுத்துறையில் இடம்பெற்ற மக்கள் அரண் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து

11

ஜனாதிபதி புலமைப்பரிசில்

# வட, கிழக்கு மாகாணங்களின் 20,404 மாணவருக்கு கிடைக்கும்

கொழும்பு, ஜூலை 15

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 20 ஆயிரத்து 404 மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. இதில், ஆயிரத்து 800 உயர்தர வகுப்பு மாணவர்களும் 18 ஆயிரத்து 604 தரம் 1 முதல் 11 வரையான வகுப்புகளின் மாணவர்களும் அடங்குவர்.

நாடு முழுவதும் ஜனாதிபதி புலமைப்பரிசிலில் ஒரு இலட்சத்து 16 ஆயிரம் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு மாதம் 6 ஆயிரம் ரூபாய் வீதம் 24 மாதங்களுக்கும் தரம் 1 முதல் 11 வரையான மாணவர்களுக்கு மாதம் 3 ஆயிரம் ரூபாய்

11

# டெங்கு பாதிப்பு 30,000 கடந்தது!

கொழும்பு, ஜூலை 15

இந்த ஆண்டில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தை கடந்துள்ளதாக தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை வரையான பதிவுகளின்

11

தமிழ் அரசுக் கட்சி வழக்கு:

# புதிய சட்ட முறைமையின் கீழ் முடிவு காண்பதற்கு இணக்கம்!

வவுனியா, ஜூலை 15

தமிழ் அரசுக் கட்சியின் வழக்கில் சட்டத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சிவில் வழக்குகளில் இணக்கத் தீர்வுக்கு வாய்ப்பான நீதிபதி, வழக்காளிகள், வழக்காளிகளின் சட்டத்தரணிகள் ஒரு மேசையிலிருந்து கலந்துரையாடி பூர்வாங்க முடிவை எடுக்கும் "விளக்கத்துக்கு முன்னரான கலந்துரையாடல் " முறைமையை கையாள்வது தொடர்பில் பேசப்பட்டதாக எம். ஏ. சுமந்திரன் எம். பி.

11

# பெரமுனவின் ஆதரவின்றி யாரும் வெற்றிபெறமுடியாது!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஜூலை 15

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்பு இல்லாமல் எந்தக் கட்சியாலும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற முடியாது. ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணிலின் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தது சிறந்த தீர்மானம் என்பதை மக்கள் ஏற்றுள்ளார்கள் - ஜனாதிபதிக்கு மக்கள் நன்றிக்கடன்பட்டுள்ளார்கள் - என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா - திவுலுபிட்டியில் நேற்று நடந்த தொகுதி

11

# இந்திய உயர்மட்ட குழு இலங்கை வருகின்றது!

கொழும்பு, ஜூலை 15

இந்தியாவின் உயர்மட்ட பிரதிநிதிகள் குழு ஒன்று அடுத்த மாதம் இலங்கை வருகின்றது. இந்திய அரசாங்கம் முன்னெடுக்கும் உட்கட்டுமான, அபிவிருத்தி திட்டங்களின் நிலை குறித்து கண்டறியவே இந்தக் குழு இங்கு வருகிறது.

இந்திய அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் இந்தக் குழுவில் உள்ளனர்.

அபிவிருத்தி திட்டங்கள் எவ்வாறு முன்னெடுக்கப்படுகின்றன என்பதை மதிப்பாய்வு செய்யும் வகையிலும் இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ளும்

11

# தமிழ் அரசுக் கட்சி முடக்கப்படவில்லை!

## சுமந்திரன் எம். பி. கூறுகிறார்

வவுனியா, ஜூலை 15

தமிழ் அரசு கட்சி முடக்கப்படவில்லை. கட்சியின் செயல்பாடுகள் எதுவும் முடங்கவில்லை. கட்சியின் சின்னம் முடக்கப்படவில்லை. கட்சி முழுமையாக செயல்பட்டுக் கொண்டே இருகின்றது. கட்சியின் சின்னத்தின் கீழ் எந்தத் தேர்தலையும் நாம் சந்திக்க முடியும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்.

வவுனியாவில் நடந்த கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துகளை

11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

பட்டப்பகலில், தங்க நகைகளுக்கு வட்டிக்குப் பணம் கொடுக்கும் வட்டிக் கடைக்குள் நுழைந்த திருடன் ஒருவன் கடைக்காரரை நோக்கித் தன் துப்பாக்கியை நீட்டி, "கையைத் தூக்கு, இல்லையேல் சுட்டு விடுவேன்" என்றான்.

உடனே கடைக்காரர் எந்த வித பதற்றமும் இன்றிச் சொன்னார்:

"துப்பாக்கி நன்றாக இருக்கிறது, இதற்கு அதிகபட்சம் முந்நூறு ரூபாய் தர முடியும்".

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களாக மூவர் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றபோதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்னமும் உத்தியோகபூர்வமாக தான் போட்டியிடுவது பற்றி அறிவிக்கவில்லை.

அவரின் பிரசாரத்தை ஒன்றிணைக்க பிரதான அலுவலகம் ஒன்று திறந்துவைக்கப் பட்டபோதிலும் அது இன்னமும் செயல்படத் தொடங்கவில்லை. அதேவேளை, கட்சியின் மூத்த தலைவர்களான ரவி கருணாநாயக்க, வஜிர அபேவர்த்தன, ருவான் விஜயவர்த்தன ஆகியோர் தனித்தனியாக தேர்தல் பணிகளை கவனிக்க வென்றும் அலுவலகங்களைத் திறந்து வைத்துவிட்டு காத்திருக்கின்றனர்.

முழுவீச்சில் பிரசாரத்தை தொடங்குவதற்காக அவர்கள் தலைவரின் உத்தரவுக்காகக் காத்திருக்கின்றனர்.

கடந்த மூன்று தேர்தல்களில் தனக்கு வெற்றி வாய்ப்பு இல்லை என்று தெரிந்து கொண்டதும் ரணில் தான் போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்ததுபோல இப்போதும் ஏதாவது நடந்துவிடுமோ என்ற எண்ணம் ஐக்கிய தேசியக் கட்சியின் சில தலைவர்களுக்கு இருக்கலாம். ஆனால், அவர் நிச்சயம் போட்டியிடுவார் என்றும் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர் அவர் முழுவீச்சில் பிரசாரத்தை கவனிக்கத் தொடங்குவார் எனவும் அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆக, மூன்று பேர் பேட்டியிடுவது என்பது நிச்சயமானது என்கின்றன தெற்கு செய்திகள். இவர்களுடன் மேலும் சிலர் போட்டியிடுவதற்கான விருப்பத்துடன் காத்திருக்கின்றனர். அவர்களில் முக்கியமானவர் பிரபல தொழில் அதிபரும் இலங்கையின் முதல்தர செல்வந்தருமான தம்மிக பெரேரா. தனது பத்தொன்பதாவது வயதிலேயே வர்த்தகத்தில் கால்பதித்து இன்று முதல்தர பணக்காரராக உயர்ந்த அவர், தேர்தலில் போட்டியிடுகின்ற விருப்பத்தை ஏன் வெளிப்படுத்தினார்? அதுவும் மகிந்த கட்சியின் வேட்பாளராக களம் இறங்க அவர் ஏன் விரும்புகின்றார்? வெற்றிபெற முடியாது என்று தெரியாமல் களத்தில் இறங்கும் அளவுக்கு அவர் களநிலவரத்தை அறியமுடியாதவரல்லர். அப்படியிருக்கையில், எதற்காக அவர் இந்த விருப்பத்தை வெளியிடுகிறார் என்று இந்த ஊர்க்குருவி அடிக்கடி தனக்குள் கேட்டுப் பார்த்ததுண்டு.

அதுகுறித்து அறிந்துகொள்வதற்காக தெற்கின் மூத்த ஊடகவியலாளர் ஒருவரிடம் பேசியபோது அவர் சொன்ன தகவல் ஆச்சரியத்தைத் தந்தது.

அவரைப் பொறுத்தவரை யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களின் தயவும் கவனிப்பும் அவருக்குத் தேவை. அவரின் பிரதான வர்த்தகமான கசினோ வர்த்தகத்துக்கு அரசாங்கம் நினைத்தால் ஒரே நாளில் பல ஆயிரம் கோடி ரூபாய்களை வரியாகக்கூட விதிக்கலாம். அப்படி எதுவும் நடந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமெனில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களை அனுசரித்து செல்லவேண்டியிருக்கும்.

இப்படியான நிலையில், பிரதான வேட்பாளர்கள் மூவருமே தமது தேர்தல் செலவுக்காக இவரை அணுகுவதைத் தவிர்க்கமுடியாது.

அப்படி மூவருக்கும் கொடுப்பதெனில் இன்றுள்ள நிலையில் மூவருமே தாங்கள் வெற்றிபெறுவோம் என்பதில் திடமான நம்பிக்கையில் இருக்கின்றனர். இதேவேளை யார் வெற்றிபெறுவார் என்பதையும் கணிக்கமுடியாத நிலைமையே இன்று காணப்படுகின்றது.

இதனால் மூவருக்கும் கணிசமான கோடிகளை கொடுக்க வேண்டியிருக்கும். ஆனால், அவர் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகக் களம் இறங்கினால் மற்றைய மூன்று வேட்பாளர்களும் அவரிடம் உதவிக்கு போகமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும்.

ஆக, முன்று பேருக்கும் கொடுப்பதைவிட தான் அதில் சிறுதொகையை செலவிட்டு தேர்தலில் போட்டியிடுவது நல்லது என்று அவர் முடிவெடுத்திருக்கலாம் என்றார் அந்த தெற்கின் ஊடக நண்பர்.

பிரபல வர்த்தகரும் முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சருமான றொசான் ரணசிங்க, மற்றுமொரு பிரபல வர்த்தகரும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் சர்ச்சைக்குரிய முன்னாள் தலைவருமான ஜனக ரத்நாயக்க ஆகியோர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கின்றனர் என்று அடிக்கடி அறிவித்தல் விடுப்பதும் இதனால்தானோ என்றும் தோன்றியது.

அந்த புத்திசாலி வட்டிக் கடைக்காரர்தான் இப்போது ஞாபகத்துக்கு வந்தார்.

- ஊர்க்குருவி

## யுக்திய நடவடிக்கையில் 750 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 15

நாடளாவிய ரீதியில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் யுக்திய நடவடிக்கையில் 750 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களில் 736 ஆண்களும் 14 பெண்களும் அடங்குவர். கைதானவர்களில் 25 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 31 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 274 கிராம் 232 மில்லிகிராம் ஹெரோயின், 272 கிராம் 799 மில்லிகிராம் ஐஸ், 89,240 கிராம் 325 மில்லிகிராம் கஞ்சா, 21 ஆயிரத்து 258 கஞ்சா செடிகள், 6 ஆயிரத்து 327 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப் பட்டது.

(ஐ)

## ஜனாதிபதி தேர்தலுக்கு எதிரான மனுமீதான விசாரணை இன்று!

கொழும்பு, ஜூலை 15

ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்தக் கோரி சட்டத்தரணி அருண லக்சிறி தாக்கல் செய்த மனுமீதான விசாரணை இன்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படுகின்றது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, அர்ஜுன ஒபேசேகர, பிரியந்த பெர்னாண்டோ உள்ளிட்ட நீதியரசர்கள் ஆயத்தின் முன்பு இந்த மனு விசாரணைக்கு வருகிறது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் முறையான முறையில் நிறைவேற்றப்படாததால், அதனை சர்வஜன வாக்கெடுப்புக்கு அனுப்பி, அதனை அங்கீகரிக்கும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதன் மூலம் அரசமைப்பு மீறப்படுவதாக தீர்ப்பளிக்க வேண்டும் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## வீட்டு பணிப் பெண்ணாக சென்றவர் நேற்று கைது!

கொழும்பு, ஜூலை 15

வெளிநாட்டு சிகரெட்களுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

துபாயில் வீட்டுப் பணிப் பெண்ணாக பணிபுரிந்துவிட்டு நாடு திரும்பிய 43 வயதுடைய பெண் ஒருவரே நேற்று ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்த பெண்ணிடமிருந்து 100 சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப் பட்டப்பட்டன.

இந்த நிலையில் அவர் நாளை மறுநாள் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்படவுள்ளார்.

(ஐ)

## புதையல் தோண்ட முயன்ற ஐந்து பேர் புத்தளத்தில் கைது

சிலாபம், ஜூலை 15

காட்டுப் பகுதியில் விளக்கேற்றி பூசை செய்து, புதையல் தோண்ட முற்பட்ட ஐந்து பேரை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

புத்தளம் - நெலும்கமமான பிரதேசத்தின் காட்டுப் பகுதியில் புதையல் தோண்டப்படுவதாக தகவல் அறிந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

இதன்போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். கைதான ஐந்து பேரும் நிக்கவெரட்டிய, வித்திக்குலிய மற்றும் நவகத்தேகம பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.

புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## ஜனாதிபதி புலமைப்பரிசில் கிளிநொச்சியில் ஆரம்பம்!

கிளிநொச்சி, ஜூலை 15

கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வடக்கு, தெற்கு என்று இரு கல்வி வலயங்கள் உள்ளன. இவற்றிலிருந்து 120 உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் 956 தரம் 1 முதல் 11 வரையான வகுப்புகளின் மாணவர்களுக்கும் ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கப் படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ்




தேவானந்தா, வடக்கு ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ், கிளிநொச்சி பதில் அரச அதிபர் எஸ். முரளிதரன் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

(ஐ)

## மட்டக்களப்பு விபத்தில் இளைஞர்கள் இருவர் காயம்!

மட்டக்களப்பு, ஜூலை 15

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தன்னாமுனைப் பகுதியில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி விபத்தில் இளைஞர்கள் இருவர் காயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை - செம்மண்ஓடை பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் முச்சக்கர வண்டியில் மட்டக்களப்பு நோக்கி தன்னாமுனை பகுதியால் செல்லும் போது பின்னால் வந்த கார் மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இவ் விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இரு இளைஞர்களும் காயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

குறித்த விபத்தில் முச்சக்கர வண்டிக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
15.07.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், ஆனி 31

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சீனாவை எப்படி எதிர்கொள்வது?

சில தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளின் தலைவர்களை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா சந்தித்திருந்தார். இதன்போது, ஜனாதிபதித் தேர்தல் உள்ளடங்கலாக பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியாவால் மட்டும்தான் சில தலையீடுகளை செய்ய முடியுமென்னும் விடயமும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

கலந்துரையாடலின்போது, ஒரு கட்டத்தில் வடக்கு - கிழக்கில் சீனாவின் உள்நுழைவு தொடர்பிலும் பேசப்பட்டிருக்கின்றது. இந்த விடயத்தில் இந்தியாவின் கரிசனைகள் நியாயமானவைதான். ஏனெனில், இந்தியாவின் அயல்நாடுகளில் சீனா அளவுக்கதிகமாக உள்நுழைய முயற்சிப்பது தொடர்பில் இந்தியா கவலை கொண்டிருக்கின்றது. ஆனால், இந்த விடயத்தில் ஈழத் தமிழர்களால் என்ன செய்ய முடியும்?

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் அதிகாரத்தோடு இல்லை. இந்த நிலையில் சில அறிக்கைகளை வெளியிடும் நிலையைத் தாண்டி தமிழ்த் தேசிய கட்சிகளால் என்ன செய்துவிட முடியும்? ஏனெனில், அனைத்து முடிவுகளும் கொழும்பில் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த முடிவுகளின் அடிப்படையில் வெளியாரின் தலையீடுகள் நிகழ்கின்றன. இந்த விடயத்தில் தமிழ் மக்கள் வெறும் பார்வையாளர்கள் மட்டுமே. இந்த விடயத்தை இந்தியா புரிந்துகொள்ள வேண்டும்.

வடக்கு - கிழக்கிலுள்ள மாகாண சபைகள் இயங்க வேண்டும். இது முதல் கட்டம் என்றால் அடுத்த கட்டமாக, அரசமைப்பிலுள்ள பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்திலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்கள் உள்ளடங்கலாக அனைத்தும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அது தமிழ் மக்களுக்கான இறுதி அரசியல் தீர்வு அல்ல. ஆனால், அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் அதிகார அரசியலில் குரலுள்ளவர்களாக மாறுவர்.

இவ்வாறானதொரு சூழல் இருக்கின்றபோதுதான் சீனாவின் உள்நுழைவுகள் தொடர்பில் தமிழ் அரசியல் தரப்புகள் தீர்க்கமான கொள்கை நிலைப்பாடுகளை மேற்கொள்ள முடியும். எனவே, வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் அதிகாரமுள்ள தரப்பாக இருக்கக் கூடிய சூழலை இந்தியா ஏற்படுத்த வேண்டும். அதிகாரமற்ற ஒரு தரப்பால் எவ்விதமான தலையீடுகளையும் மேற்கொள்ள முடியாது.


இந்த விடயங்களை கருத்தில் கொண்டு தமிழ் மக்கள் விவகாரத்தில் இந்தியா காத்திரமான தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும். வடக்கு - கிழக்கில் மாகாண சபைகள் இயங்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும். இந்தியா இதற்கான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும். பொருளாதார நெருக்கடியின்போது இந்தியா வழங்கிய உதவியால்தான் இலங்கை மூச்சுவிட முடிந்தது. எனவே, இந்தியாவுக்கு ஏனைய எந்தவொரு நாட்டைவிடவும் தலையிடும் - அறிவுரை கூறும் தகுதியும் ஆற்றலும் உண்டு. இதனை அடிப்படையாகக் கொண்டு வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் அதிகாரமுள்ள ஒரு தரப்பாக இயங்கக்கூடிய நிலைமையை இந்தியா ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான், வடக்கு - கிழக்கில் சீனாவின் தலையீடுகள் தொடர்பில் தமிழ்த் தேசிய அரசியல் தரப்புகள் காத்திரமான கொள்கைசார் தீர்மானங்களை நிறைவேற்ற முடியும்.

# தமிழ் மக்கள் பொதுச் சபையின் மாதாந்த கூட்டம் மட்டக்களப்பில்

*மட்டக்களப்பு, ஜூலை 15*

தமிழ் மக்கள் பொதுச் சபையின் மாதாந்த கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு ஊறணி அமெரிக்க மிஷன் மண்டபத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை சேர்ந்த 100 வரையிலான பொது - மக்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.




தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் தொடர்பாக முன்னெடுக்கப்படவுள்ள அடுத்த கட்ட நடவடிக்கைகள் உட்பட பல விடயங்கள் இதன்போது உரையாடப்பட்டன என்று தெரிய வருகின்றது. (ஐ)

# தலங்காவல் பிள்ளையார் ஆலய சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு

*யாழ்ப்பாணம், ஜூலை 15*

மாணவர்களிடையே சமய அறிவையும் அதன் மூலம் ஒழுக்கநெறியையும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோவில் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் நடத்தப்படும் சமய அறிவுப்போட்டி இம் முறையும் நடைபெற்றது. அதற்கான பரிசளிப்பு நிகழ்ச்சி அண்மையில் தீர்த்தத் திருவிழாவன்று ஆலய முன்றலில் நடைபெற்றது.



தரம் 3 தொடக்கம் 11 வரை பயிலுகின்ற 215 மாணவர்கள் எழுத்து மூலப் பரீட்சையில் தோற்றியிருந்தார்கள் இவர்களில் 152 பேர் பரிசுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் 3 பயிலும் செல்வி தீபிகா விஜய் 100 புள்ளிகளைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். இப் பதக்கம் ஆண்டுதோறும் அமரர்களான சி. பொன்னுத்துரை, பொ. தங்கமாணிக்கம் ஆகியோர் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்ச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆலய பிரதமகுரு விக்னராஜா சர்மா, பெருந்திருவிழா குரு ஞானானந்த குருக்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தார்கள்.

பரீட்சைக் குழு சார்பாக தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், ஆனைப்பந்தி அமெரிக்கன் மிசன் பாடசாலை அதிபர் யோ. ஜெக ஆனந்தம் பங்கேற்றிருந்தார்கள்.

(ஐ)

# சுற்றுலா வந்த பெண் கடலில் மூழ்கி மரணம்

*கொழும்பு, ஜூலை 15*

சுற்றுலா வந்த வெளிநாட்டு பெண்ணொருவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

மாத்தறை - வெலிகம பொலிஸ் பிரிவில் மிரிஸ்ஸ கடலில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், தென்கொரியாவை சேர்ந்த 37 வயது பெண் ஒருவரே உயிரிழந்தார். அலையில் அடித்துச் செல்லப்பட்ட பெண்ணை மீட்பு படையினர் காப்பாற்றி மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

எனினும், அவர் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கு முன்னதாக உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும் பணவரவு திருப்தி தரும் தொட்டது துலங்கும்.

**இடபம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். புது அதிகாரி உங்களை மதிப்பார். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். பேச்சில் இங்கிதம் தேவையான நாள்.

**துலாம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டிவரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். பொறுமை தேவைப்படும் நாள்.

**விருச்சிகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**தனுசு**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மகரம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் டென்ஷன் வரும். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

**மீனம்**
கடினமான வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

# தமிழகத்துக்கு தண்ணீர் திறக்க கர்நாடக அரசு முற்றாக மறுப்பு

சென்னை, ஜூலை 15

காவிரியிலிருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடாத கர்நாடக அரசுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பழனிச்சாமி கூறுகையில்,

காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் உத்தரவை ஏற்க மறுக்கும் கர்நாடக காங்கிரஸ் அரசின் போக்கு கடும் கண்டனத்துக்குரியது. தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின், காங்கிரஸின் தயவுக்காக தமிழகத்தின் ஜீவாதார உரிமையை விட்டுக்கொடுப்பது சரியல்ல. மேடையில் மாநில உரிமை பேசிவிட்டு, தமிழக மக்களின் வாழ்வோடு விளையாடுவது கண்டனத்துக்குரியது- என்றார்.

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவிக்கையில், தண்ணீர் திறக்க மாட்டோம் என கர்நாடக முதல்வர் பேசியிருப்பது உச்ச நீதிமன்றத்தை அவமதிப்பதாகும். இதுகுறித்து கர்நாடக அரசிடம் பேசவோ அல்லது அழுத்தம் கொடுக்கவோ தி. மு. க. முன்வராதது கண்டனத்துக்குரியது எனக் குறிப்பிட்டார்.

பா. ஜ. க. கர்நாடகாவில் ஆட்சியில் இருந்தபோது, வறட்சி சூழ்நிலையிலும் தண்ணீர் திறந்துவிட்டார்கள். காங்கிரஸ் ஆட்சிக்கு வந்த பிறகுதான், இந்தப் பிரச்னை ஏற்பட்டுள்ளது. எனது உருவ பொம்மையை எரிக்கும் தமிழக காங்கிரஸார், சித்தராமையாவை சந்தித்து தண்ணீர் திறந்துவிடுமாறு சொல்லியிருந்தால் பாராட்டி இருப்பேன். இந்த விவகாரத்தில் மத்திய அரசின் மீது பழி போடுவதை ஏற்க முடியாது என்று பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ கூறுகையில, கர்நாடகாவில் உள்ள அணைகளில் முழு கொள்ளளவு நீர் இருப்பு உள்ளபோதும், தமிழகத்துக்கு தண்ணீர் வழங்க முடியாது என்று கர்நாடக முதல்வர் கூறுவது கண்டனத்துக்குரியது. மத்திய பா. ஜ. க. அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவைச் செயல்படுத்த வேண்டும். தமிழக அரசு, கர்நாடக மாநிலத்தின் அநீதியை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய வேண்டும் - என்றார்.

வி. சி. க. தலைவர் திருமாவளவன் தெரிவிக்கையில், தமிழக அரசும் உடனடியாக அனைத்துக் கட்சிகள் மற்றும் விவசாய இயக்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய அவசரக் கூட்டத்தைக் கூட்டி, உரிய முடிவெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். (எ)

## விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி. மு. க. அன்னியூர் சிவா வெற்றி



விழுப்புரம், ஜூலை 15

விக்கிரவாண்டி இடைத் தேர்தல் முடிவு தமிழக முதல்வரின் சாதனைக்கு கிடைத்த வெற்றி என்று தி. மு. க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அன்னியூர் சிவா தெரிவித்தார்.

"இது தமிழக முதல்வரின் சாதனைக்கு கிடைத்த வெற்றி. வெற்றிக்குப் பாடுபட்ட உதயநிதி உள்ளிட்ட அமைச்சர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" -என்றார். (எ)



## துரைமுருகன் மருத்துவமனையில்

சென்னை, ஜூலை 15

தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டு மயக்க மடைந்தார்.

இதனையடுத்து, உடனடியாக அவர் அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

## "கச்சதீவில் மீன்பிடிக்க அனுமதி தேவை"

ராமநாதபுரம், ஜூலை 15

"இந்திய அரசும், இலங்கை அரசும் பேச்சுகளை நடத்தி கச்சதீவு பகுதியில் குத்தகை அடிப்படையில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்" என மத்திய மீன்வளத்துறை அமைச்சரிடம் இழுவைமடி படகு மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மதுரையில் நடைபெற்ற தேசிய மீன் விவசாயிகள் கருத்தரங்கில் அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் பங்கேற்றார். இதன் போதே அமைச்சரிடம் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. (எ)

# திராவிட கட்சிகளுடன் இனி கூட்டணி இல்லை

**சீமான் உறுதி**



சென்னை, ஜூலை 15

திராவிட கட்சிகளுடன் எம்மால் இனி கூட்டணி அமைக்க முடியாது என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

நாகரிக அரசியல் தெரியாத தி. மு. க., இழிவாகப் பேசுவதற்கு என்றே பேச்சாளர்களை வைத்திருக்கது.

ஆனால், நாங்கள் சண்டாளர் என்று பேசிவிட்டதாக குற்றம் சாட்டுகின்றனர். சண்டாளர் என்ற சமூகம் இருப்பதே எங்களுக்குத் தெரியாது. கிராமங்களில் சண்டாளன் என்பது இயல்பாக உபயோகப்படுத்தும் வார்த்தை. முன்னாள் முதல்வர் கருணாநிதி குறித்த பாடலை வெளியிட்டது அ. தி. மு. க.தான். இவ்வளவு காலம் சண்டாளர் என்று சொல்லும் போது வலிக்காமல், திடீரென்று ஏன் இப்போது வலிக்கிறது. அந்த சமூகத்தினருக்கு கஷ்டமாக இருந்தால், சாணார், நாடார் ஆனதைப்போல, கள்ளர், மறவர் எல்லாம் தேவர் ஆனதைபோல வேறு பெயர் வைத்துக்கொள்ளலாமே?- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் தலைமையிலான புதிய கூட்டணி ஓகஸ்ட் 1ஆம் திகதி அறிவிக்கப்படும்

கொழும்பு, ஜூலை 15

**ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான அரசியல் கூட்டணி எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.**

கொழும்பில் மிகப்பெரிய மாநாட்டின் மூலம் இந்த அறிவிப்பு வெளியிடப்படும். இதற்கான ஏற்பாடுகள் அனைத்து மட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைமைத்துவமாக கொண்டு பரந்துபட்ட அரசியல் கூட்டணிக்கான பேச்சு முடிவுற்றுள்ளது. வரும் ஜனாதிபதி தேர்தலின் வெற்றியை இலக்காக கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இந்த கூட்டணி குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு ஓகஸ்ட் மாதத்தில் வெளிப்படுத்தப்படவுள்ளது.

தமிழ் மற்றும் முஸ்லிம் உள்ளிட்ட பல கட்சிகள் உள்ளடங்கலாக இந்த எதிர்க்கட்சியின் கூட்டணி அமையப்பெற்றுள்ளது.

எந்தெந்த கட்சி மற்றும் முக்கிய அரசியல் பிரமுகர்கள் இணைந்துள்ளார்கள் என்பதை தற்போது கூற இயலாது என தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, உரிய திகதி நெருங்குகையில் அரசியல் கூட்டணி குறித்த முழுமையான தகவல்கள் வெளிப்படுத்தப்படும் என்றார்.

எவ்வாறாயினும் சிறிலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறிய டலஸ் அழகப்பெரும, ஜீ.எல். பீரிஸ் மற்றும் விமல் வீரவன்ஸ உள்ளிட்டவர்கள் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர் என்று தெரியவருகின்றது.

# ஓகஸ்ட் 4 -10 வரை நெடுவூர் திருவிழா!

யாழ்ப்பாணம், ஜூலை 16

நெடுவூர்த் திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நெடுந்தீவில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பின் ஏற்பாட்டில் "மீண்டும் ஊருக்குப் போகலாம்" என்ற தொனிப்பொருளில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

நெடுந்தீவிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் மக்கள், நெடுந்தீவு குறித்த ஆர்வலர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்பர்.

இந்த நிகழ்விலே மூலிகைக் கண்காட்சி, கல்விக் கண்காட்சி, பனைசார் உணவுகள், விவசாய கைவினைகள் கடலுணவு சார்ந்த உள்ளூர் உற்பத்தி பாரம்பரிய கலை நிகழ்வுகள், விளையாட்டுகள் நூல் வெளியீடு இலக்கிய வெளியீடு போன்றனவும் நடைபெறவுள்ளன.

(ஐ)

# யாழிலிருந்து திருமலை சென்ற நால்வர் வீதி விபத்தில் காயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 15

அநுராதபுரத்திலிருந்து திருகோணமலைக்கு சென்ற கார் பாலத்தின் பாதுகாப்பு வேலியில் மோதிய விபத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் காயமடைந்தனர்.


ஹொரவப்பொத்தானை யான் ஓயா பாலத்தில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை கலக்கமே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. விபத்தில் காயமடைந்தவர்கள் ஹொரவப்பொத்தானை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெண் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ஐ)

# சைவ அறங்காவல் கருத்தரங்கு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது





யாழ்ப்பாணம், ஜூலை 15

தென்னாடு - செந்தமிழ் ஆகம சிவ மடத்தின் ஏற்பாட்டில் "சைவ அறங்காவல்" என்ற பொருளில் முழு நாள் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நட்சத்திர விடுதியில் நடைபெற்றது.

தென்னாடு அமைப்பின் நிறுவுநர் பொறியியலாளர் குணரத்தினம் பார்த்தீபன் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு தென்னாடு பத்திரிகை ஆசிரியர் செந்தமிழாதன் (ஜீவா சஜீவன்) தலைமை தாங்கினார்.

தருமபுரம் ஆதீனத்தின் திருக்கேதீச்சர கிளைமட கட்டளை தம்பிரான் மீனாட்சி சுந்தர தம்பிரான் சுவாமிகள், யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, சிவ சேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் ஆகியோர் நிகழ்வில் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் கருத்துரைகளை "இலங்கையில் சைவம் அன்றும் இன்றும்" என்ற பொருளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும் "சைவத்தின் சமகால செல்நெறி - சில அவதானிப்புகள்" என்ற பொருளில் கொழும்பு ஆறுமுக நாவலர் சபை செயலாளர் மருத்துவர் கி. பிரதாபனும் "திருமுறை சிறப்பும் சாத்திரச் சிறப்பும்" என்ற பொருளில் தமிழ்நாடு செந்தமிழரசு கி. சிவகுமாரும் "சைவ அறங்காவல்", என்ற பொருளில் பொறியியலாளர் குணரத்தினம் பார்த்தீபனும் "திருமுறை மகத்துவம்", என்ற பொருளில் சைவநீதி அமைப்பின் தலைவர் குணா துரைசிங்கமும் கருத்துரைகளை வழங்கினர்.

வடக்கு ,கிழக்கு, மலையகம், கொழும்பு என இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட இளையோர் இக்கருத்தரங்கில் பங்கு பற்றி பயன்பெற்றனர். நிகழ்வில் பங்குபெற்றோருக்கு தென்னாடு பத்திரிகை விபூதி பொட்டலங்கள் மற்றும் நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

(ஐ)

# ஓகஸ்ட் மாதம் முதல் மீண்டும் யாழ். - கொழும்பு ரயில் சேவை!

கொழும்பு, ஜூலை 15

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை மீண்டும் எதிர்வரும் ஓகஸ்ட் ஆரம்பமாகும் என்று தெரியவந்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் புனரமைப்பு பணிகளுக்காக மூடப்பட்ட மாகோ- அநுராதபுரம் இடையிலான புகையிரத பாதை பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

புதிய புகையிரத பாதை மாகோ புகையிரத நிலையத்துக்கு அருகில் உள்ள பழைய புகையிரத பாதையுடன் இணைக்கப்பட்டுள்ளது.இந்த வீதி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி திறந்து வைக்க வாய்ப்புள்ளது.

முன்னதாக இந்திய உதவியுடன் மாகோ - வவுனியா - காங்கேசன்துறை போக்குவரத்து வசதிக்காக தண்டவாளங்கள் திருத்தப்பட்டன. தற்போது மாகோ - அநுராதபுரம் வரையான புகையிரதப் பாதை திருத்தம் செய்யப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# காணிகளை பதிவு செய்யுமாறு கமநல திணைக்களம் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 15

"ஜிஜோகொவியா" திட்டத்தின் கீழ் நெற்பரப்பு காணிகளை பதிவு செய்யுமாறு காணிகளின் உரிமையாளர்களுக்கு யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் "ஜிஜோ கொவியா" திட்டத்தின் கீழ் நெற்பரப்புக் காணிகள் ஜி. பி. எஸ். மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றது. இருப்பினும், இந்தத் திட்டத்தின் கீழ் நெல் காணி பதிவுகளை மேற்கொள்வதில் காணி உரிமையாளர்கள் பின்னடிப்பதாக யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அந்த திணைக்களம் மேலும் தெரிவிக்கையில்,

இந்த திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 95 வீதமான காணிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அதன் உரிமையாளர்கள் 50 வீதத்துக்கும் குறைவானவர்களே இந்தத் திட்டத்தின்கீழ் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். ஏனைய காணி உரிமையாளர்கள் இதுவரையில் குறித்த திட்டத்தின் கீழ் காணிகளை அடையாளப்படுத்தவில்லை.

எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்களை கருத்தில் கொண்டு காணிகளின் உரிமையாளர்கள் அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள கமநல அபிவிருத்தி நிலையத்தில் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ)

# வேலையற்ற பட்டதாரிகள் நாளை யாழில் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 15

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பில்வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் கபில்டன் போல் தெரிவிக்கையில்,

இந்தப் போராட்டத்தின் நோக்கம் எமக்கான வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்வது மாத்திரம் அன்றி, எதிர்கால தலைமுறையினரும் எம்மைப் போல் அவலநிலையை எதிர்கொள்ளாமல் இருக்கும் வகையிலான கல்வி சீர்திருத்தை வலியுறுத்துவதையும் மையமாகக் கொண்டுள்ளது.

பட்டதாரிகளுக்கான வேலையில்லா பிரச்னை என்பது பட்டதாரிகளை மாத்திரமல்ல அவர்கள் சார்ந்த குடும்பங்களையும் சமூகத்தையும் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார ரீதியாக வெகுவாக பாதித்துள்ளது. அத்துடன், எதிர்கால தலைமுறையினரையும் முழு சமுதாயத்தையும் மிக மோசமாக பாதிக்கும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும்.


எனவே, தற்போதைய தேர்தல்காலத்தில் எமக்கான பிரச்னைகளை வெளிக்கொணர்வதன்மூலம் ஏதேனும் ஒரு வகையிலான சாதகமான வாய்ப்பை நாம் பெற்றுக்கொள்ள முடியும். போராட்டங்கள் மூலம் மட்டுமே எங்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொள்ளமுடியும் என்பது எமது நாட்டைப் பொறுத்தவரை நிதர்சனமான உண்மை. இந்தப் போராட்டத்தில் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளும் பங்கேற்க வேண்டும் - என்றார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகளுக்கு சென்று சிகிச்சை அளிக்கும் நடைமுறை நிறுத்தத்தால் பலர் பாதிப்பு!

## மீளவும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை



மன்னார், ஜூலை 15

**மன்னாரில் இறுதிநிலை நோயாளர்களின் வீடுகளுக்கு சென்று அளிக்கப்படும் சிகிச்சையை பல மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், அந்த நோயாளர்களும் அவர்களின் குடும்பத்தினரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

இறுதி நிலை நோயாளர்கள் எனப்படும் புற்று நோயாளர்கள், சிறுநீரக நோயாளர்கள், படுக்கையில் இருக்கும் நோயாளர்களை அவர்களின் வீடுகளுக்கே சென்று பரிசோதிக்கும் முறைமை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இறுதிநிலை நோயாளர்களாக உள்ள பலர் நடமாடக்கூடிய நிலையில் இல்லை. அத்துடன், அவர்களை வாகனங்களில் ஏற்றிச்செல்வதற்கு வசதிகளற்ற ஏழைகளாக உள்ளனர்.

இந்த நிலையில், வீடுகளுக்கு வந்து நோயாளர்களை பரிசோதிக்கும் நடைறை திடீரென நிறுத்தப்பட்டமையால் நோயாளர்களும் அவர்களைப் பராமரிக்கும் குடும்பத்தினரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன், மனஉளைச்சலுக்கும் உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு இறுதி நிலை நோயாளர்கள் முழுவதும் நூற்றுக்கணக்கில் இருப்பதால் அவர்களின் நன்மை கருதி இந்த சேவையை மீளவும் ஆரம்பிக்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# கசிப்பு விற்பனை செய்த பெண் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 15

நீண்டகாலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவரை யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் குற்றத் தடுப்பு பிரிவினரும் கைது செய்துள்ளனர்.

சுழிபுரம் - பறாளாய் பகுதியை சேர்ந்த 47 வயது பெண்ணே நேற்று முன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸாரும் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட போது அந்தப் பெண்ணிடமிருந்து 10 போத்தல் கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபரை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (ஐ)

# சமுர்த்தி வங்கியின் ஊடாக அஸ்வெசும கடன் திட்டம்!

கொழும்பு, ஜூலை 15

சமுர்த்தி அபிவிருத்தி வங்கியின் ஊடாக அஸ்வெசும கடன் வழங்கும் திட்டம் ஒன்று இந்த மாதம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்துள்ளார்.

இதன்கீழ் தொழில் முயற்சி, விவசாயம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பவற்றுக்காக விசேட முறைமையின் கீழ் கடன்கள் வழங்கப்படும்.

நலன்புரி திட்டங்கள் ஊடாக மாத்திரம் நாட்டை வளப்படுத்த முடியாது. சிறந்த உற்பத்திகள் மூலமாகவே நாட்டை அபிவிருத்தியடைய செய்ய முடியும்.

இது தொடர்பான நம்பிக்கையை மக்களுக்கு வழங்குவதற்காகவே இந்தக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதாக இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் உடன் நிற்கிறோம்!

## அமெரிக்கத் தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

இன்னமும் பதிலுக்காகக் காத்திருக்கும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினருடன் தாம் உடன் நிற்பதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியை அகழும் மூன்றாம் கட்ட பணிகளை அமெரிக்க தூதரகத்தின் அரசியல் பிரிவு அதிகாரி மத்தியூ ஹின்ஸன் நேரடியாக பார்வையிட்டதன் பின்னரே தூதரகம் இப்படித் தெரிவித்துள்ளது.

அமெரிக்க தூதரக அதிகாரி கடந்த வெள்ளிக்கிழமை மனிதப் புதைகுழி அகழ்வை நேரில் பார்வையிட்டார்.

இது தொடர்பாக அமெரிக்க தூதரகம் தனது எக்ஸ் தளத்தில், "இலங்கையில் பல தசாப்தகாலமாக இடம்பெற்ற சிவில் யுத்தத்தின்போது வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினருடனான எமது உடன் நிற்பை வெளிப்படுத்தும் வகையில், காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகளுடன் எமது தூதரக அதிகாரி கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகளைப் பார்வையிட்டார் - என்றும், "இன்னமும் பதிலுக்காகக் காத்திருப்போருக்கான உண்மை, ஆறுதல் மற்றும் வெளிப்படைத்தன்மையை நோக்கிய இந்த முக்கிய நகர்வைத் தாம் பெரிதும் வரவேற்பதாகவும் அது குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# கொக்குத்தொடுவாயில் 2 மனித எலும்புக்கூடு மீட்பு

முல்லைத்தீவு, ஜூலை 15

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மேலும் 2 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அத்துடன், சயனைட் குப்பி ஒன்றும் மீட்கப்பட்டது.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வாய்வின் ஒன்பதாம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இந்த அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் இதற்கு முன்னர் இடம்பெற்ற இரண்டுகட்ட அகழ்வாய்வுகளின்போது 40 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

மூன்றாம் கட்ட ஆய்வில் 7 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் கணப்பட்டன. இவற்றில் 5 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எனது குழந்தையையும் இழந்து நீதியும் கிட்டாது தவிக்கிறேன்!

## பாதிக்கப்பட்ட பொதுமகன் ஆதங்கம்

கிளிநொச்சி, ஜூலை 15

எனது குழந்தையையும் மனைவியின் கர்ப்ப பையையும் இழந்து தவிக்கும் எனக்கு ஆண்டு ஒன்றாகியும் நீதி கிட்டவில்லை என்று என்று கிளிநொச்சி - நாதன்குடியிருப்பை சேர்ந்த இ. சுரேஷ் என்பவர் வேதனை தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு கிளிநொச்சி மருத்துவமனையில் பிரசவத்துக்காக சேர்க்கப்பட்ட பெண் ஒருவரின் குழந்தை உயிரிழந்ததுடன், அந்தப் பெண்ணின் கர்ப்பபையும் அகற்றப்பட்டது. இதற்கு மருத்துவ தவறே காரணம் என்று கூறப்பட்டது. இந்த நிலையிலேயே பாதிக்கப்பட்டவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், "மருத்துவ தவறு காரணமாக எனக்கு பிறந்த ஒரேயொரு குழந்தையையும் மனைவியின் கர்ப்ப பையையும் இழந்து ஆண்டு ஒன்றாகிறது. எனக்கு இழைக்கப்பட்ட இந்த மோசமான அநீதி தொடர்பில் நான் இதுவரை பொலிஸ் நிலையம், மனித உரிமைகள் ஆணைக்குழு, சுகாதார அமைச்சு, ஜனாதிபதி செயலகம் என பல தரப்பினர்களிடமும் முறையிட்டேன். முறைப்பாடு கிடைத்ததாக பதில் கிடைத்ததே தவிர எனக்கு இன்று வரை நீதி கிடைக்கவில்லை.

குருக்கள் செய்தால் குற்றமில்லை என்பது போல மருத்துவ தவறுகளுக்கும் குற்றமில்லாத நிலைமையே இங்குள்ளது. என் வாழ்க்கையில் இனி ஒரு குழந்தை இல்லை. என் இளம் மனைவி இனிமேல் தாயாக முடியாது. சில மருத்துவர்களின் அலட்சியம், கவனக்குறைவு, படித்தவர்கள் என்ற மமதையில் ஏழை நோயாளிகளின் வார்த்தைகளை செவிமடுக்காமை போன்ற காரணங்களால் ஏற்படுகின்ற அநீதிகளுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை என்பது பெரும் கவலையே. எனக்கு பிறந்த குழந்தையையும் இழந்துவிட்டேன். சரி நாம் இருவரும் இளம் கணவன் மனைவி எனவே இனியொரு குழந்தையை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிம்மதி அடையும் முன்னே மனைவியின் கர்ப்ப பையும் அகற்றப்பட்ட செய்தி இடியாய் விழுந்தது. நாம் இருவரும் இன்னும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. எங்கள் வாழ்க்கையை இழந்துவிட்டதாகவே உணர்கின்றோம்.

பிள்ளைகள்தொடர்பில் எங்கள் ஆசைகள், கனவுகள், எல்லாமே தகர்க்கப்பட்டுவிட்டன. எம் இருவரின் வாழ்க்கையும் சூனியமாகிவிட்டது. பிள்ளையும் இல்லை, மனைவியின் கர்ப்ப பையும் இல்லை நீதியும் இல்லை.

ஏழைகளுக்கு நீதி எட்டாக் கனி என்பது அனுபவத்தால் புரிந்துகொண்டேன். இந்த ஒரு வருடமாக நானும் மனைவியும் அனுபவிக்கும் வேதனையும், மன உளைச்சலும் இனி எவருக்கும் ஏற்படக் கூடாது என்றே கடவுளிடம் வேண்டுகிறேன் - என்றும் கூறியுள்ளார். (ஐ)

# இலங்கையர் ஒருவர் இஸ்ரேலில் காயம்!

கொழும்பு, ஜூலை 15

இஸ்ரேலில் பணியாற்றிவரும் இலங்கையர் ஒருவர் ஏவுகணை வீழ்ந்ததில் காயமடைந்தார்.

இந்தத் தகவலை இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார உறுதிப்படுத்தினார்.

காயமடைந்தவர் வடக்கு இஸ்ரேலின் லெபனான் எல்லைக்கு அருகில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த இலங்கையராவார்.

ஏவுணையின் இரும்புத் துண்டு ஒன்று தலையில் தாக்கியதில் குறித்த நபர் காயமடைந்தார். அவர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொத்து விவரங்களை வழங்காத எம்.பிக்களுக்கு இறுதி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

**இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு இன்னும் தமது சொத்துகள் மற்றும் கடன்கள் தொடர்பான விவரங்களை சமர்ப்பிக்காத அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த மாத இறுதிக்குள் சமர்ப்பிக்குமாறு "இறுதி அறிவிப்பை" விடுத்துள்ளது.**

ஆணைக்குழு பாராளுமன்ற செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோருக்கு இதுதொடர்பாக கடிதம் எழுதியுள்ளது. அத்துடன், இதுவரையில் தமது சொத்துகள் மற்றும் கடன் பிரகடனங்களை கையளித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் பெயர் பட்டியலை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான பிரகடனங்களை பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும், அதேவேளை அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் அத்தகைய பிரகடனங்களை ஜனாதிபதியின் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

தங்கள் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கைகளை சமர்ப்பிக்காதவர்களின் சம்பளத்தில் மூன்றில் ஒரு பங்குக்கு கூடுதல் கட்டணம் விதிக்க அதிகாரம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வீதி விபத்துகளால் ஒரேநாளில் 5 பேர் பலி!

கொழும்பு, ஜூலை 14

நாட்டில் நேற்று முன்தினம் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துகளில் ஐவர் உயிரிழந்தனர்.

குருநாகல் - கிரிஉல்ல பிரதேசத்தில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதிய விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர். அதே இடத்தைச் சேர்ந்த 19, 21 வயது இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

இதேவேளை, காலி - கொழும்பு வீதியில் காலி -அம்பலாங்கொடையில் மோட்டார் சைக்கிள் விபத்தில் 20 வயது இளைஞர் உயிரிழந்தார். வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றது.

அம்பாந்தோட்டை - லுணுகம்வெஹரவில் வீதியைக் கடந்த ஒருவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் பாதசாரியான 33 வயது நபர் உயிரிழந்தார்.

கம்பஹா - ஹங்வெல்லையில் முச்சக்கரவண்டி பாதசாரி பெண்ணை மோதியதில் அந்தப் பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். (ஐ)

# சிறுவரிடையே சுவாச நோய் பரவல் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 15

சிறுவர்களிடையே ஆஸ்துமா (முட்டு வருத்தம்) உள்ளிட்ட சுவாசம் சார்ந்த நோய்கள் அதிகரித்து வருகின்றன என்று சிறுவர் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இருமல், சுவாசிப்பதில் சிரமம், இருமலுடன் வாந்தி வெளியேறல் போன்றன இந்த நோயின் அறிகுறிகளாகும். நாட்டின் பல பகுதிகளில் தற்போது பரவிவரும் இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சலின் பின்னரும் இவ்வாறாக சிறுவர்களுக்கு ஆஸ்துமா ஏற்படவாய்ப்புள்ளது.

தூசி அதிகம் உள்ள வீடுகளிலும், புகைபிடிக்கும் பெரியவர்கள் வசிக்கும் வீடுகளிலும் உள்ள சிறுவர்களுக்கு இவ்வாறு ஆஸ்துமா நோய் ஏற்படும் அபாயம் அதிகமாகும். எனினும் இந்த நிலைமை தொடர்பில் அச்சமடைய தேவையில்லை எனவும் முறையான சிகிச்சையின் மூலம் இதனைக் குணப்படுத்த முடியும்.

அத்துடன், ஒரு வாரம் அல்லது இரண்டு வாரங்களுக்கு மேலாக இருமல் நீடிக்குமாயின், மருத்துவரை நாடி சிகிச்சைகளை பெறவேண்டும். சில நேரங்களில் இது சயரோகத்துக்கான (எலும்புருக்கி நோய்) அறிகுறிகளாகவும் காணப்படக்கூடும் - என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# வறுமை அதிகரித்தமையாலேயே சமூகவிரோத செயல்கள் உயர்வு!

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 15

இன்று மக்கள் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும், வருமானம் ஈட்டும் வழிகளிலும் மீளமுடியாத வகையில் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். கஷ்டங்கள் நிறைந்த பெரும் அழுத்தங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். நகர்ப்புற வறுமை கூட வியாபித்துள்ளது. இதனால் சமூக விரோத நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பு, திம்பிரிகஸ்யாய, சுசமயவர்தன மகா வித்தியாலயத்துக்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன்," பாடசாலை மாணவர்களும் போதைப் பொருளுக்கு அடிமையாகாது நடுநிலை சிந்தனையோடு செயற்பட வேண்டும். நல்ல சிந்தனையோடு பாடசாலை பிள்ளைகள் வளர வேண்டும். மதுபானம், போதைப் பொருள் மற்றும் புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு ஆளாகக் கூடாது. மதுப் பழக்கம் ஒரு நாகரிகமற்ற செயல்.

"பெற்றோர்களும் மதுவைத் தவிர்க்க வேண்டும். பிள்ளைகள் பெற்றோரை பின்பற்றுகிறார்கள். எனவே, இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி நடந்து கொள்ள வேண்டும். பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியையும் நல்ல நாகரீக வாழ்க்கையும் அமைத்துக் கொடுக்க சகலரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும்." எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# பாதாள உலக குழுவின் மிரட்டலுக்கு பயந்து நடவடிக்கை நிறுத்தப்படாது!

கொழும்பு, ஜூலை 15

பாதாள உலக ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களை கொல்லப்போவதாக தகவல் பரப்பி, அச்சுறுத்தல் விடுத்து பெயர் பட்டியல்களை சமூக ஊடகங்களில் வெளியிட்டு பயமுறுத்த முயற்சிகளை மேற்கொண்டாலும் எதிரான நடவடிக்கைகளை நிறுத்த பொலிஸார் தயாராக இல்லை என்று பொலிஸ் மா அதிபர் கூறியுள்ளார்.

கடந்த யுத்தத்தின் போது பயங்கரவாத அச்சுறுத்தல்களை அச்சமின்றி எதிர்கொண்டது போன்று போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்தை ஒழிப்பதற்காக உயிரை தியாகம் செய்யக்கூடிய ஆயிரக்கணக்கான பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருக்கின்றனர் என்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

புத்தளத்தில் உள்ள எரியூட்டி மூலம் 335 கிலோ கொக்கெய்னை அழிக்கும் நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், யுக்திய இரண்டாம் கட்ட நடவடிக்கையில் சட்டவிரோத துப்பாக்கிகளை பறிமுதல் செய்வது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும். இதுவரை 296 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாதாள உலகம் என அழைக்கப்படும் ஒழுங்கமைத்த குற்றக் கும்பலும் போதைப்பொருள் கடத்தலும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் எனவும் போதைப் பொருள் கடத்தல் மூலம் கிடைக்கும் பெரும்சொத்துக்களால் இந்த குற்றவாளிகளுக்கு உணவளிக்கப்படுவதால் கைது செய்வதற்கு மக்களின் ஆதரவு தேவை என்றும் அவர் தெரிவித்தார்.

# வெளிநாடுகளில் வசிக்கும் குற்றவாளிகள் கைதாவர்

## பொது மக்கள் அமைச்சர் டிரான் அலஸ்



கொழும்பு, ஜூலை 15

வெளிநாடுகளில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

முல்லேரியா பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வெளிநாடுகளில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 29 குற்றவாளிகள் தொடர்பில் பொலிஸார் விசேட கவனம் செலுத்தி வருகின்றனர். (ஐ)

# உரிய அனுமதி பெறாமல் அரச காணி குத்தகைக்கு

## கோப் குழு வெளிப்படுத்தியது

கொழும்பு, ஜூலை 15

கொழும்பில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான 6 ஏக்கர் காணியை 2019 ஆம் ஆண்டு பணிப்பாளர் சபையின் அனுமதியின்றி ஆயிரத்து 200 கோடி ரூபாய்க்கு 99 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டமை அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவில் தெரியவந்துள்ளது.

அத்துடன், அனுமதிக்கப்பட்ட குத்தகை ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெறாது வேறு நிபந்தனைகள் அதில் உள்ளடக்கப்பட்டிருப்பதும் இங்கு புலப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த ஒப்பந்தத்தின் வரைவு தொடர்பில் சட்டப் பணிப்பாளருக்கு எதிராக ஒழுங்காற்று விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாக கோப் குழு கூட்டத்தின் போது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தலைமையில் அண்மையில் கூடிய கோப் குழுவிலேயே இந்த விடயங்கள் தெரியவந்தன.

குறித்த காணியை பணிப்பாளர் சபையின் உத்தியோகபூர்வ அனுமதியின்றி குத்தகைக்கு வழங்கியதன் காரணமாக அதிகார சபைக்கு 33 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த விவகாரங்கள் தொடர்பாக முறையான அறிக்கையை 2 வாரங்களுக்குள் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறும் குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றில் உள்ள வீட்டு சின்னம் வெளியில் வருவது சந்தேகமே!

## கூறுகிறார் கோவிந்தன் கருணாகரம்

மட்டக்களப்பு, ஜுலை 15

**அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றாக இணைந்து கூட்டமைப்பாக போட்டியிட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. ஆனால், வீட்டுச் சின்னம் நீதிமன்றில் வைக்கப்பட்டுள்ளது. அடுத்த தேர்தலில் அது வெளியில் வருவதே சந்தேகம் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**



மட்டக்களப்பில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பிரிந்துள்ளதன் காரணமாக பாராளுமன்றக் குழுக்களின் தலைவர் பதவியை செல்வம் அடைக்கலநாதனுக்கு வழங்க முடியாது என்ற வகையில் சிலர் பேசி வருகின்றனர். ஆனால், கட்சி செயல்பாடுகளுக்கும் பாராளுமன்றக் குழுக்களின் தலைவர் பதவிக்கும் தொடர்பு இல்லையென்ற காரணத்தால் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினராகவுள்ள செல்வம் அடைக்கலநாதனை பாராளுமன்றக் குழுக்களின் தலைவராக நியமிக்குமாறு கோரியுள்ளோம்.

மட்டக்களப்பில் எங்களால் முன்மொழியப்படும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது எமக்கு அழைப்பு விடுவதற்கு அமைச்சர்கள் அச்சம் கொள்கின்றனர்- என்றார்.

(அ- எ)



# 10 வெற்றிகளுடன் மாகாண போட்டிக்கு அஸ்ரப் வித்தியாலய மாணவிகள் தெரிவு

சாய்ந்தமருது, ஜுலை 15

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது எம். எச். எம். அஸ்ரப் வித்தியாலய மாணவிகள் இம்முறை நடைபெற்ற வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் 10 வெற்றி இடங்களைத் தமதாக்கி மாகாணப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு வருடமும் கல்வியிலும், விளையாட்டு, கலை, இலக்கியப் போட்டிகளிலும் பிரகாசிக்கும் இந்த பாடசாலை மாணவர்கள் கடந்த காலங்களில் மாகாண மற்றும் தேசிய அளவில் பிரகாசித்திருந்தனர்.



# இறந்து கரையொதுங்கும் முதலைகளால் துர்நாற்றம்

காரைதீவு, ஜுலை 15

அம்பாறை, காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளி பாலம் அருகில் அண்மைக்காலமாக முதலைகள் பல இறந்த நிலையில் இறந்து கரையொதுங்கி வருகின்றன.

இதனால் அந்தப் பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுவதுடன் அப்பகுதியினால் பொதுமக்கள் சிரமத்துடன் பயணம் செய்வதை அவதானிக்க முடிகின்றது.

மேலும், இந்தப் பாலத்தை அண்டிய பகுதிகளில் 30 இற்கும் அதிகமான முதலைகள் காணப்பட்ட போதிலும் தற்போது 10 முதல் 15 வரையிலான முதலைகளே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

7 அடி முதல் 9 அடி வரையான முதலைகள் தற்போது இறந்த நிலையில் நீரில் மிதந்து காணப்படுகின்றன.

அத்துடன் குறித்த பாலத்தை சுற்றி சட்டவிரோதமாக குப்பைகளும் கொட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு முதலைகள் இறந்த நிலையில் காணப்படுவது குறித்து பல்வேறு சந்தேகங்களை பொதுமக்கள் தெரிவித்து வருகின்றனர்.

(எ)

# முஸ்லிம் சமூகத்தின் பலம் ஜனாதிபதியை தீர்மானிக்கும்

## சொல்கிறார் ஹரீஸ் எம்.பி

முஸ்லிம் சமூகத்தின் பலம் ஜனாதிபதியைத் தீர்மானிக்கும், பாராளுமன்ற ஆட்சியைத் தீர்மானிக்கும் பலமாக இருக்கும் போது ஆறு பேர்ச் நிலத்தின் காணி உறுதியைப் பெற முடியாதவாறு தடுக்கும் சக்திகளுக்கு எதிராகப் போராட திராணியற்ற சமூகமாகவும், இயக்கமாகவும் நாங்கள் இருக்க முடியாது - இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச். எம். எம். ஹரீஸ் தெரிவித்தார்.



தமிழ் - முஸ்லிம் மக்கள் இணைந்து வாழும் பிரதேசங்களில் தொடர்ந்தும் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் இனத்துவ சமநிலை பேணப்பட வேண்டும். தமிழ் சகோதரர்கள் பிரதேச செயலாளர்களாக இருந்தால் முஸ்லிம் சகோதரர் ஒருவர் உதவி பிரதேச செயலாளராக இருக்க வேண்டும். அதுபோன்று முஸ்லிம் சகோதரர் ஒருவர் பிரதேச செயலாளராக இருந்தால் தமிழ் சகோதரர் ஒருவர் உதவி பிரதேச செயலாளராக இருக்க வேண்டும். இன்னும் கதைத்து கதைத்து காலத்தை கழிக்க முடியாது. உடனடியாக செயலில் இறங்க வேண்டிய நேரத்தில் இருக்கிறோம். மக்களினுடைய உரிமை சார்ந்த விடயங்களில் நாங்கள் எப்போதும் கரிசனையுடனையே இருக்கிறோம் என்றும் ஹரீஸ் எம். பி. குறிப்பிட்டார்.

நாவிதன்வெளி அபிவிருத்தி பெருவிழா நிகழ்வுகள் அமீரலி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எங்கள் மண்ணின் வளங்களைப் பயன்படுத்தி எத்தனை தொழில்பேட்டைகளை உருவாக்கப் போகிறீர்கள் என ஜனாதிபதி வேட்பாளர்களிடம் நாம் கேட்போம். அவர்களை ஆதரிக்க முன்னர் அம்பாறை மாவட்ட இளைஞர், யுவதிகள் எத்தனை பேருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கப்போகிறீர்கள் என்று கேட்போம். எங்களின் மூதாதையர்கள், தாய் தந்தைகள் தந்த நிலங்களுக்கு உரிமை கேட்க பிரதேச செயலகங்களில் பிச்சை பாத்திரம் சுமக்கும் சமூகமாக நாம் இருக்க முடியாது- என்றார்.

(எ)

# தூணில் மோதிய எரிபொருள் பவுசர்; தொலைபேசி சேவைகள் துண்டிப்பு

காத்தான்குடி, ஜுலை 15

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று அதிகாலை எரிபொருள் பவுசர் வாகனம் மதிலொன்றில் மோதியதுடன், இதனால் ரெலிகொம் தொலைத்தொடர்பு வலையமைப்பின் தூண்களும் உடைக்கப்பட்டுள்ளன. இதனால் அந்தப் பிரதேசத்தில் தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியாருக்குச் சொந்தமான எரிபொருள் பவுசர் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று அதிகாலை 3. 30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்தில் சிக்கிய எரிபொருள் பவுசரின் முன்பகுதி பலத்த சேதமடைந்துள்ளது.

அத்தோடு, பவுசர் மோதியதில் வீதியோரம் உள்ள தனியாருக்குச் சொந்தமான வளாகமொன்றின் மதிலின் ஒரு பகுதியும், இலங்கை ரெலிகொம் தொலைத்தொடர்பு வலையமைப்பின் தூண்களும் உடைக்கப்பட்டுள்ளன. இதனால் அப்பிரதேசத்தில் தொலைத்தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.



இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளில் காத்தான்குடி பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

(எ)

# நாய்பட்டிமுனை நற்பிட்டிமுனை என்று மாற்றம்

அம்பாறை, ஜுலை 15

அம்பாறை மாவட்டத்தில் கடந்த காலங்களில் அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் பிரிவில் கல்முனை பிரதான அஞ்சல் அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நாய்பட்டிமுனை உப அஞ்சல் அலுவலகம் 2024. 04. 02 அன்று முதல் நற்பிட்டிமுனை உப தபால் கந்தோர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப்மீது நேற்று துப்பாக்கி சூடு!




வாஷிங்டன், ஜூலை 15

**அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் அவருக்கு காது பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனைத்தொடர்ந்து அவர் மேடையில் இருந்து பாதுகாவலர்கள் புடைசூழ வெளியேறினார்.**

இந்தத் தாக்குதலை அமெரிக்க உளவுத்துறை உறுதி செய்துள்ளது. துப்பாக்கிச் சூடு தாக்குதலுக்குள்ளான ட்ரம்ப் நலமுடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் உள்ளூரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் உள்ள பட்லர் நகரில் குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தனது ஆதரவாளர்கள் மத்தியில் நேற்று உரையாற்றினார். அப்போது இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டு அங்கு குழுமியிருந்த மக்கள் கீழே குனிந்தனர். மேடையில் பேசிக் கொண்டிருந்த ட்ரம்பும் குனிந்தார்.

இதில் ட்ரம்பின் வலது காது பகுதியில் காயம் ஏற்பட்டது. காதில் இருந்து இரத்தம் சொட்டிய நிலையில் தனது கையை உயர்த்தி காட்டினார். தொடர்ந்து பாதுகாவலர்கள் அவரை மேடையில் இருந்து பத்திரமாக அழைத்துச் சென்றனர். இதில் கூட்டத்தில் பங்கேற்ற ஒருவர் கொல்லப்பட்டார். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மீது பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் அவர் உயிரிழந்தார். இதற்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். (எ)



# பாடசாலை கட்டடம் இடிந்து 22 மாணவர்கள் உயிரிழப்பு!

அபுஜா, ஜூலை 15

நைஜீரியாவில் இரண்டு மாடி பாடசாலைக் கட்டடம் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி 22 மாணவர்கள் உயிரிழந்தனர். இதேவேளை, 100 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மீட்கப்பட்டனர்.

வட மத்திய ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் ஜோஸ் நகரில் வெள்ளிக்கிழமை வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இரண்டு மாடி பாடசாலைக் கட்டடம் திடீரென இடிந்து விழுந்தது. இடிபாடுகளில் சிக்கி 22 மாணவர்கள் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் சிக்கிய மாணவர்கள் அனைவரும் 15 வயது மற்றும் அதற்கும் கீழான வயதுள்ள மாணவர்கள். கட்டடம் இடிந்து விழுந்தபோது 154 மாணவர்கள் இடிபாடுகளில் சிக்கியதாகவும் அவர்களில் 22 மாணவர்கள் உயிரிழந்துவிட்டனர் என்றும், 132 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை கட்டடத்தின் பலவீனமான அமைப்பு காரணமாகவும், ஆற்றங்கரைக்கு அருகில் கட்டப்பட்டதன் காரணமாகவும் இந்த விபத்து நேரிட்டிருப்பதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை அடுத்து, இதே போன்ற நிலையில் உள்ள பாடசாலைகளை உடன் மூடவும் அரசு உத்தரவிட்டுள்ளது. (எ)

# காஸா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் வான்வழி தாக்குதல்

## 71 பேர் பலி, 289 பேர் காயம்



டெல் அவில், ஜூலை 15

கான் யூனிஸூக்கு மேற்கே உள்ள அல்-மவாசி அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 71 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 289 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காஸா நகரில் இடம்பெயர்ந்த பலஸ்தீனர்களை இலக்கு வைத்து இஸ்ரேலியப் படைகள் வேண்டுமென்றே தாக்கியதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. அங்கு, நகரின் தால் அல்-ஹவா பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பிறகு நூற்றுக்கணக்கான சடலங்கள் மீட்கப்பட்டன. இந்த நிலையில், கான் யூனிஸூக்கு மேற்கே உள்ள அல்-மவாசி அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 71 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 289 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஹமாஸ் தரப்பில், "கான் யூனிஸில் நடந்த இந்தக் கொடூரமான படுகொலையை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். இது காஸா பகுதியில் நிகழ்த்தப்படும் குற்றங்கள் மற்றும் படுகொலைகளின் ஆபத்தான அதிகரிப்பு ஆகும். இந்தப் படுகொலைகள் போர் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதது" எனத் தெரிவித்துள்ளது. (எ)

# ரஷ்யாவுக்கு எதிராக ஐ. நாவில் தீர்மானம்!

## இந்தியா, பாகிஸ்தான் புறக்கணிப்பு

நியூயோர்க், ஜூலை 15

உக்ரைன் மீது போர் தொடுத்த ரஷ்யாவுக்கு எதிராக ஐ. நாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா புறக்கணித்துள்ளது.

உக்ரைனுக்கு எதிரான தனது ஆக்கிரமிப்பை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும் மற்றும் ஜபோரிஜியா அணுமின் நிலையத்திலிருந்து தனது இராணுவம் மற்றும் பிற அங்கீகரிக்கப்படாத பணியாளர்களை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று கோரும் வரைவு தீர்மானத்தை உக்ரைன் கொண்டு வந்தது.

ஜபோரிஜியா அணுமின் நிலையம் உட்பட உக்ரைனின் அணுசக்தி நிலையங்களின் பாதுகாப்பு என்ற தலைப்பிலான இந்தத் தீர்மானத்தில், "உக்ரைனுக்கு எதிரான ஆக்கிரமிப்பை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்குள் உள்ள உக்ரைன் பிரதேசத்தில் இருந்து தனது அனைத்து இராணுவப் படைகளையும் நிபந்தனையின்றி திரும்பப் பெற வேண்டும்.

உக்ரைனின் அனைத்து அணுசக்தி நிலையங்களிலும் அணு விபத்து அல்லது விபத்து ஏற்படும் அபாயத்தை ரஷ்யா அதிகரிக்கிறது. எனவே, அணுமின் நிலையத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உக்ரைனின் இறையாண்மையின்கீழ், அந்த நாட்டு அதிகாரிகளின் முழு கட்டுப்பாட்டுக்கு உடனடியாக ஆலையை திரும்ப ஒப்படைக்க வேண்டும். உக்ரைனின் எரிசக்தி உள்கட்டமைப்புக்கு எதிரான தாக்குதல்களை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட 50 இற்கும் மேற்பட்ட நாடுகள் இந்த வரைவு தீர்மானத்தை ஆதரித்தன.

இதனையடுத்து, 193 உறுப்பினர்களைக் கொண்ட ஐ. நா. பொதுச் சபை, இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. இந்தத் தீர்மானத்தின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பில், அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட 99 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. ரஷ்யா, பெலாரஸ், கியூபா, வட கொரியா, சிரியா உள்ளிட்ட 9 நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்தன. இந்தியா, சீனா, பங்களாதேஷ், பூட்டான், எகிப்து, நேபாளம், பாகிஸ்தான், சவுதி அரேபியா, தென்னாபிரிக்கா உட்பட 99 நாடுகள் வாக்களிப்பை புறக்கணித்தன.

# இந்திய மக்கள் தொகை 170 கோடியாக உயரும்

## ஐக்கிய நாடுகள் சபை

நியூயோர்க், ஜூலை 15

இந்தியாவின் மக்கள் தொகை 2060 ஆம் ஆண்டு முற்பகுதியில் 170 கோடியாக உயரும் என்றும் இந்த நூற்றாண்டு முழுவதும் உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக இந்தியா இருக்கும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.(எ)

## 33 இந்திய கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்பு!

ரோம், ஜூலை 15

கொத்தடிமைகளாக இத்தாலி நாட்டின் பண்ணைகளில் பணியாற்றி வந்த 33 இந்தியத் தொழிலாளர்களை விடுத்துள்ளதாக இத்தாலி பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# ஊழியரை இருட்டு அறையில் அடைத்து வைத்த சீன நிறுவனம்

## ரூ. 2 கோடி அபராதம் விதிப்பு

பீஜிங், ஜூலை 15

ஊழியரை இருட்டு அறையில் பூட்டி வைத்து சித்திரவதை செய்த சீன நிறுவனத்துக்கு இலங்கை மதிப்பில் சுமார் 2 கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என்று அந்த நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குவாங்சோ டுயோய் நெற்வேர்க் நிறுவன ஊழியர் ஒருவர் பணி நீக்கம் தொடர்பான விவகாரத்தில் இவருக்கும் நிறுவனத்துக்கும் இடையே முரண்பாடு இருந்து வந்தது. அந்த நிறுவனம், லியுவை தாமாக முன்வந்து வேலையை இராஜினாமா செய்யுமாறு கேட்டுள்ளது. இதற்கு, அவர் மறுக்கவே பணியிடத்தில் உள்ள தனி இருட்டு அறையில் நான்கு நாட்கள் பூட்டி வைத்து சித்திரவதை செய்துள்ளது. இந்த நிலையிலேயே நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தல் குறித்த முக்கிய அறிவிப்பு நாளை!

## தேர்தல்கள் ஆணைக்குழு

**கொழும்பு, ஜூலை 15**

**ஜனாதிபதித் தேர்தல் 2024 தொடர்பான விசேட அறிவிப்பு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வெளியிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

அரசமைப்புக்கு அமைய செவ்வாய்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்கான தினத்தை அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கிறது. இதேபோன்று அரசமைப்புக்கு அமைய ஒக்ரோபர் 17ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னர் புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு நிறைவடைந்திருக்க வேண்டும்.

அத்தோடு ஒக்ரோபர் மாதத்தில் நாட்டில் இயற்கை அனர்த்தம் அல்லது ஏதேனும் திடீர் அனர்த்தங்கள் ஏற்பட்டால் மாத்திரம் ஒரு வாரத்துக்கு தேர்தலை ஒத்திவைப்பதற்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு உண்டு. அவ்வாறில்லை எனில், ஒக்ரோபர் 12ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் செப்ரெம்பர் மாத்துக்குள் தேர்தல் நடத்தப்பட்டால் சிறந்தது என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளது. ஆனால், ஜனாதிபதித் தேர்தல் குறித்து எந்த அறிவிப்பையும் ஜனாதிபதி ரணில் வெளியிடமாட்டார். அது முற்றுமுழுதாக தேர்தல் ஆணைக்குழுவுக்குரிய அதிகாரம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

மேலும், தேர்தலில் களமிறங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வற்புறுத்திக் கொண்டிருக்கின்றோம். இதுவரையில் அவர் போட்டியிடுகிறார் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. அவர் அவ்வாறு அறிவித்தாலும் தற்போது ஜனாதிபதிக்குரிய சிறப்புரிமைகளை பயன்படுத்த முடியாது. எனவே, நாளை நள்ளிரவு 12 மணிக்கு பின்னரே எந்தவொரு உத்தியோகபூர்வ அறிவித்தலும் வெளியிடப்ப டும். அதுவரை அனைவரும் காத்திருக்க வேண்டும் என்றும் கூறினார். (ஐ)

# பொருளாதாரம் மீள சரியாமல் வலுவாகக் கட்டமைக்கப்படும்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15


பிள்ளைகளின் எதிர்காலத்துக்காக வலுவான பொருளாதார முறைமை கட்டியெழுப்படும். அந்த முறைமை குறுகிய காலத்துக்கானதாக அன்றி நீண்ட காலத்துக்கு நாட்டின் பொருளாதாரம் சரிவடையாமல் பாதுகாக்கும் வகையில் வலுவாக கட்டமைக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அநுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் பின்னர் தேசிய ரீதியில் சிந்தித்துச் செயல்படக்கூடிய அரசியல் குழுவொன்று நாட்டுக்கு கிடைத்திருக்கிறது. 5 வருடங்களில் ஆட்சி மாற்றம் செய்வது குறித்து சிந்திப்பதற்கு மாறாக தேசிய மட்டத்தில் சிந்தித்து செயல்படக்கூடிய அரசியல் முறைமையே எதிர்காலத்திலும் நாட்டுக்குத் தேவைப்படும்.

தற்போது பின்பற்றும் பொருளாதார முறைமைகள் மூலம் முன்னேற்றத்தை அடைய முடியாது. இதனால் ஒரு நாடு என்ற வகையில் மேலும் கடன் படுவதை மாத்திரமே செய்ய முடியும். அவ்வாறு செய்தால் இந்த பிள்ளைகள் எதிர்பார்க்கும் சிறந்த எதிர்காலமும் கிடைக்காது. அதேபோல் இன்னும் 15 வருடங்களில் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்படும்.

அதனால் நாடாக முன்னோக்கிச் செல்வதா? மீண்டும் பொருளாதாரம் சரிவடைய இடமளிப்பதா என்பதை தீர்மானிக்க வேண்டும் - என்றும் ஜனாதிபதி கூறினார். (ஐ)



கதிர்காமம் ஆலயத்தின் பெருந்திருவிழா நடைபெற்று வருகிறது இதில், கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஊர்வலத்தின்போ....!

# பொருளாதாரம், பாதுகாப்பு குறித்து அமெரிக்கா - இலங்கை ஆராய்ந்தன

கொழும்பு, ஜூலை 15

பொருளாதாரம், பாதுகாப்புத்துறை ஆகியவற்றில் இரு தரப்பு ஒத்துழைப்பை கட்டியெழுப்புதல் தொடர்பில் அமெரிக்க - இலங்கை பிரதிநிதிகள் விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இலங்கை - அமெரிக்க நாடுகளுக்கு இடையிலான இரு தரப்பு நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் தொடர்ந்து 5 ஆவது முறையாக வெள்ளிக்கிழமை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அமெரிக்க - இலங்கை பங்காண்மை கலந்துரையாடலின்போதே மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலுக்கு இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தனவும், அமெரிக்கா சார்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான பதில் செயலர் ஜோன் பாஸும் தலைமை தாங்கினர்.

இதன்போது பொருளாதாரம், பாதுகாப்பு ஒத்துழைப்பு, ஜனநாயகம், நல்லிணக்கம், மனித உரிமைகள், காலநிலை மாற்றம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு, கல்வி மற்றும் கலாசார ஒத்துழைப்பு, மக்களுக்கு இடையிலான தொடர்புகள் என்பன உள்ளடங்கலாக இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக இந்த இரு தரப்பு கலந்துரையாடல் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் செயலர் ஜோன் பாஸ், “பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளடங்கலாக இருநாடுகளுக்கும் பொதுவான பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடியதாகவும், இரு நாட்டினதும் 76 வருடகால நல்லுறவானது சுபீட்சமானதும், பாதுகாப்பானதுமான பிராந்தியத்தைக் கட்டியெழுப்புவதில் தாம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாட்டைப் பிரதிபலிக்கிறது” என்றார். (ஐ)

# முஸ்லிம் மக்களின் உரிமைக்காக ஞானசார தேரரே குரல் கொடுத்தார்

## ஓஷல ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 15

முஸ்லிம் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்த ஒரே பிக்கு ஞானசார தேரரே. அவருக்கு மன்னிப்பு அளிக்க வேண்டும் என்று ஓஷல ஹேரத் தெரிவித்துள்ளார்.

கலகொட அத்தே ஞானசார தேரர் 2016ஆம் ஆண்டு இழைக்கப்பட்ட குற்றத்துக்காக நான்கு வருட சிறைத்தண்டனையை அனுபவித்து வருகிறார். அல்லாஹ் தொடர்பில் தேரர் தெரிவித்த கருத்து தொடர்பில் ரிசாத் பதியுதீன், அசாத் சாலி, முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் தாக்கல் செய்த வழக்கிலேயே இந்தத் தண்டனை கிடைத்தது.

எவ்வாறாயினும், இந்த சம்பவத்தின் பின்னர் ஞானசார தேரர் அவ்வாறான தவறை செய்யவில்லை. 5-6 வருடங்கள் நாட்டின் நல்லிணக்கத்துக்காக பாடுபட்டிருந்தார்.

கோவிட் தொற்றுநோயின் போது தகனம் கட்டாயமாக்கப்பட்ட போது, அதற்கு எதிராக முஸ்லிம் மக்களின் உரிமைக்காக குரல் கொடுத்த ஒரே பிக்கு ஞானசார தேரரே என்றும், அவர் முஸ்லிம் மக்களின் அடக்க உரிமைக்காகவும் உண்மைகளை முன்வைத்து நின்றார் எனவும் தெரிவித்துள்ளார்.

ஞானசார தேரர் செய்த தவறுகாக நீதிமன்றில் மன்னிப்புக் கோரி, பின்னர் நாட்டின் நல்லிணக்கத்துக்காக பாடுபடுவது குறித்து ஆலோசித்து அவருக்கு சுதந்திரம் வழங்க தலையிடுமாறு முஸ்லிம் சமூகத்தையும், முஸ்லிம் மத மற்றும் அரசியல் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். ஞானசார தேரர் தன்னை திருத்திக்கொள்ள சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)



# வெளிநாட்டிலுள்ள குற்றவாளிகளை கைது செய்து அழைத்துவர நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 15

சர்வதேச பொலிஸின் சிவப்பு பட்டியலில் உள்ள 45 இலங்கை குற்றவாளிகளை பொறியில் சிக்கவைத்து கைது செய்து நாட்டுக்கு அழைத்துவர பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

சர்வதேச பொலிஸாரால் சிவப்பு பட்டியலிடப்பட்ட 45 இலங்கை குற்றவாளிகள் வெளிநாடுகளில் பெரும்பாலும் ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த தகவலை உயர்மட்ட பொலிஸ் வட்டாரம் தெரிவித்துள்ளது.

இவர்கள் இலங்கையில் சட்டவிரோதமான செயல்பாடுகளை மேற்கொண்டு வரும் வேளையில் பிடிபடுவதைத் தவிர்ப்பதற்காக ஆரம்பத்தில் டுபாயில் தஞ்சம் புகுந்து அங்கிருந்து வேறு நாடுகளுக்கு சென்றுள்ளனர்.

எனவே, இந்த நாடுகளுடன் கைச்சாத்திடப்பட்ட நாடு கடத்தல் உடன்படிக்கைகளின் அடிப்படையில் அவர்களை பொறியில் சிக்க வைத்து இங்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாக கூறப்படுகின்றது.

அதனடிப்படையில், இலங்கை அதிகாரிகள், துபாய் அதிகாரிகளுடன் இணைந்து, சிவப்பு அறிவிப்புகளின் அடிப்படையில் சில இலங்கைக் குற்றவாளிகளை கைது செய்து, பின்னர் இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளதோடு இலங்கையிலும் ஐந்து குற்றவாளிகளை கைது செய்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி தேர்த...

இதனிடையே, எதிர்வரும் 17ஆம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வருகைதருமாறு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரின் அறிவுறுத்தலுக்கமைய இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி தேர்தலுக்கான நிதியை விடுவித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடத் திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

## பிரபாகரனின்...

அந்தக் கூட்டத்தில் நாடு பொருளாதார ரீதியில் மீண்டெழுந்த பின்னரே தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான சூழல் ஏற்படும் என்ற கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். ஆனால், நாட்டின் அரசமைப்பில் பொருளாதாரத்தை மீட்ட பின்னர் தான் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று எங்கும் கூறப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரத்தை காரணம் காண்பித்து தன்னுடைய அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்த முனைந்து வந்தார்.

தற்போதும், ஜனாதிபதியின் பதவிக் காலத்தினை மையப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை தாமதப்படுத்த முயற்சிகளை எடுத்திருந்தார். முன்னதாக தன்னுடைய கட்சியின் செயலாளரைப் பயன்படுத்தி காய்களை நகர்த்தினார்.

அதனைத் தொடர்ந்து நீதிமன்றத்தின் ஊடாகவும் முயற்சிகள் நடத்தப்பட்டன. ஆனால், இப்போது நீதித்துறையும் சட்டவாக்கத்துறையும் (எதிர்க்கட்சிகள்) மிகவும் உறுதியாக இருப்பததால் அவருக்கு அடுத்தகட்டத்தை சிந்திக்க முடியாத இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அதாவது, கிளிநொச்சி வீழ்ச்சியின் பின்னர் எவ்வாறு வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு சிந்திப்பதற்கு கால அவகாசம் இருக்கவில்லையோ அதேபோன்றுதான் இப்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தேர்தலை ஒத்திவைப்பது குறித்து நகர்வுகளைச் செய்வதற்கு சிந்திப்பதற்கான கால அவகாசம் போதாதுள்ளது. அதேநேரம், ஜனாதிபதி ரணில் இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு காரணம், தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவர் கொண்டிருக்கின்ற நம்பிக்கையீனமும் கள யதார்த்தமுமே ஆகும் - என்றும் கூறினார். (ஐ)

## தமிழ் அரசுக்...

பகிர்ந்த அவர்,

"வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதால் தமிழ் அரசுக் கட்சி செயல்பட முடியாமல் இருக்கின்றத - நீதிமன்றத்தில் முடங்கிக் கிடக்கின்றது - கட்சியின் சின்னத்தைப் பாவிக்க முடியாமல் இருக்கின்றது, தேர்தல் வந்தால் என்ன செய்வார்கள்?" என்றெல்லாம் பலர் நீலிக்கண்ணீர் வடிக்கின்ற விடயம் நடந்துகொண்டிருக்கின்றது. இதனைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. இதனை ஊடகங்கள் மூலம் தெளிவுபடுத்துமாறும் என்னைப் பணித்தும் இருக்கின்றார்கள்.

கட்சி முடக்கப்படவில்லை. கட்சியின் செயல்பாடுகள் எதுவும் முடங்கவில்லை. கட்சியின் சின்னம் முடக்கப்படவில்லை. கட்சி முழுமையாக செயல்பட்டுக் கொண்டே இருகின்றது. கட்சியின் சின்னத்தின் கீழ் எந்தத் தேர்தலையும் நாம் சந்திக்க முடியும். அதற்கு எந்தவிதமான இடர்பாடுகளும் கிடையாது. ஆகவே, இதைத் தெரிந்து கொண்டே சிலர் வேண்டுமென்றே பிரசாரத்தை மேற்கொள்கின்றார்கள்.

வழக்கில் நிறுத்தப்பட்டிருப்பது கட்சியின் தெரிவுகளே. கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தெரிவுகளை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று ஒரு தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது. அதனுடைய பிரதிபலன் என்னவென்றால் அதற்கு முன்னிருந்த தலைவர், செயலாளர், நிர்வாகிகள் கட்சியின் செயல்பாட்டை முன்னெடுக்க முடியும். அதற்கு எந்தவிதமான தடையும் கிடையாது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உயிர்ப்புடன் - ஆக்கபூர்வமான பிரதிநிதிகளுடன் தொடர்ந்தும் பயணிக்கின்றது. எதிர்வரும் எந்தத் தேர்தலில் கட்சி போட்டியிடும். மக்களுக்கான தனது செயல்பாட்டைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் - என்றார்.

அத்துடன், பாராளுமன்ற குழுத் தலைவர் தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை. அது தொடர்பில் எமது கட்சியின் அரசியல் குழு இணைய வழி ஊடாக ஒரு தடவை கலந்துரையாடியது. மத்திய செயல்குழுவில் அது சம்பந்தமான தீர்மானம் எடுப்போம் - என்றார். (ஐ)

## இந்திய உயர்...

வகையிலும் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்திக்கொள்ளவும் இந்தக் குழுவின் வருகை வாய்ப்பாக இருக்கும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

இந்திய குழுவினர் நாட்டின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுகளையும் நடத்துவர் என்று தெரிய வருகின்றது. (ஐ)

## பெரமுனவின்...

அமைப்பாளர்கள் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்த ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு எதிராக ஒருபோதும் செயல்படவில்லை. 2015ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் எடுத்த தவறான தீர்மானத்தை 2019ஆம் ஆண்டு திருத்திக்கொண்டார்கள்.

பூகோள மட்டத்தில் பொருளாதாரம் மற்றும் சமூக கட்டமைப்பில் ஏற்பட்ட தாக்கத்தை நாடு என்ற ரீதியிலும் நாமும் எதிர்கொண்டோம். கோவிட் பெருந்தொற்று தாக்கத்துக்கு மத்தியில் நாட்டை மூடினால் பொருளாதார நெருக்கடி தீவிரமடையும் என பொருளாதார நிபுணர்கள் குறிப்பிட்டார்கள்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை பிறப்பிக்காவிடின் நாட்டு மக்கள் உயிரிழப்பார்கள் என்று மருத்துவ நிபுணர்கள் குறிப்பிட்டார்கள். பொருளாதாரமா, மக்களின் உயிரா என்ற தீர்மானமிக்க நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களின் சுகாதார ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு தீர்மானம் எடுத்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களை யுத்தத்தில் இருந்து பாதுகாத்தார். கோட்டபய ராஜபக்ஷ கோவிட் பெருந்தொற்றில் இருந்து மக்களை பாதுகாத்தார். இதனை எவராலும் மறுக்க முடியாது. பொருளாதார நெருக்கடியை ஒரு தரப்பினர் அரசியல் நெருக்கடியாக மாற்றியமைத்தார்கள்.

திட்டமிட்ட வகையில் போராட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தபோது எவரும் சவால்களை பொறுப்பேற்க முன்வரவில்லை. நெருக்கடியான சூழ்நிலையில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தோம். எமது தீர்மானம் சிறந்தது என்பதை நாட்டு மக்கள் தற்போது ஏற்றுள்ளார்கள்.

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தீர்மானம்மிக்கது. பொதுஜன பெரமுனவின் ஆதரவு இல்லாமல் எந்த அரசியல் கட்சியாலும் தேர்தலில் வெற்றிபெற முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டு மக்கள் நன்றி கடன் பட்டுள்ளார்கள். ஆகவே, அரசியலில் சிறந்த தீர்மானத்தை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## வட, கிழக்கு...

வீதம் 12 மாதங்களுக்கும் புலமைப்பரிசில் வழங்கப்படும். அத்துடன், உயர்தர வகுப்பில் தகவல் தொழில்நுட்பம் கற்கும் மாணவர்களுக்கும் பிக்கு மாணவர்களுக்கும் ஜனாதிபதி புலமைப்பரிசில் வழங்கப்படும். இந்தத் திட்டத்துக்காக 500 கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உயர்தர வகுப்பை சேர்ந்த 780 மாணவர்களுக்கும் தரம் 1 முதல் 11 வரையான வகுப்புகளை சேர்ந்த 7 ஆயிரத்து 856 மாணவர்களுக்கும் ஜனாதிபதி புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உயர்தர வகுப்பை சேர்ந்த 300 பேருக்கும் 1 - 11 வரையான வகுப்புகளை சேர்ந்த 3 ஆயிரத்து 544 மாணவர்களுக்கும் மன்னார் மாவட்டத்தில் உயர்தர வகுப்பை சேர்ந்த 120 மாணவர்களுக்கும் 1 - 11 வரையான வகுப்புகளை சேர்ந்த ஆயிரத்து 30 மாணவர்களுக்கும் வவுனியா மாவட்டத்தில் உயர்தர வகுப்பின் 120 மாணவர்களுக்கும், 1 - 11 வரையான வகுப்புகளை சேர்ந்த ஆயிரத்து 298 மாணவர்களுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 120 உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் 1 - 11 வரையான வகுப்புகளை சேர்ந்த ஆயிரத்து 28 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 120 உயர்தர மாணவர்களுக்கும் 956 தரம் 1 - 11 வரையானமாணவர்களுக்கும் ஜனாதிபதி புலமைப்பரிசிலை பெறுவர்.

இதேபோன்று கிழக்கு மாகாணத்தில் 1020 உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் 10 ஆயிரத்து 748 தரம் 1 முதல் 11 வரையான வகுப்புகளின் மாணவர்களுக்கும் ஜனாதிபதி புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 300 உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் 3 ஆயிரத்து 436 தரம் 1 முதல் 11 வரையான வகுப்புகளின் மாணவர்களுக்கும் அம்பாறை மாவட்டத்தில் 420 உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் 4 ஆயிரத்து 340 தரம் 1 முதல் 11 வரையான வகுப்புகளின் மாணவர்களுக்கும் திருகோணமலை மாவட்டத்தில் 300 உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் 2 ஆயிரத்து 972 தரம் 1 முதல் 11 வரையான வகுப்புகளின் மாணவர்களும் புலமைப்பரிசிலை பெறுவர்.

இதேநேரம், இந்தப் புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்காத பாடசாலைகள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்று ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது. (ஐ)

## டெங்கு பாதிப்பு...

படி, 30 ஆயிரத்து 57 பேர் டெங்கு நோய் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். 6 ஆயிரத்து 910 நோயாளர்கள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். இதுவே, அதிக டெங்கு நோயாளர்கள் பதிவான மாவட்டமாகும்.

இதேநேரம், மேல் மாகாணத்தில் அதிகளவானோர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு 11 ஆயிரத்து 661 பேர் பாதிக்கப்பட்டனர். இந்த மாகாணத்தில் கடந்த 13 நாட்களில் மட்டும் ஆயிரத்து 818 டெங்கு நோயாளர்கள் பதிவாகினர்.

அண்மைநாட்களாக நாட்டின் பல பகுதிகளில் பெய்துவரும் மழையே டெங்கு நோய் பரவலுக்குக் காரணம். டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்த சுற்றுப்புற சூழலை தூய்மையாக வைத்திருக்குமாறு சுகாதார அதிகாரிகள் மக்களை அறிவுறுத்தியள்ளனர். (ஐ)

## அரசாங்கம் மீதான...

அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை இந்த மாதத்தில் 24 வீதமாக உயர்ந்துள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், நாட்டின் பொருளாதாரம் - பொருளாதார போக்கு தொடர்பில் அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கையை உணர்கின்றனர் என்றும் அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## மகிந்தவை...

வெளியிட்ட போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை அழித்த திருடர்களை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக ஜே. வி. பியினர் செயல்பட்டாலும் அந்தத் திருடர்களுடன் இணைந்து பதவிகளை ஏற்றுக் கொள்ளத் தாம் ஒருபோதும் விரும்பவில்லை - என்று கூறினார். (ஐ)

## சஜித்தின் பாதுகாப்...

முயற்சி ஜனநாயகத்தின் மீதான தாக்குதல். அரசியல்வாதிகள் இவ்வாறான அரசியலில் ஈடுபடுவதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்.

இலங்கையிலும் சில அரசியல் கட்சிகள் தமது அரசியல் நிகழ்ச்சி நிரல்களை பூர்த்தி செய்ய முடியாதபோது இவ்வாறான தந்திரோபாயங்களை பயன்படுத்த முனைகின்றன. கடந்த காலங்களிலும் வேட்பாளர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. நாம் ஒரு ஜனநாயக நாடு. பொது ஆணை மற்றும் தேர்தல்கள் மூலம் இங்கு அரசியல் நடக்கிறது - ஆயுதங்களுடன் அல்ல. அதனால்தான் அரசிடம் இந்தக் கோரிக்கையை முன்வைக்கிறேன். சஜித் பிரேமதாஸவின் பாதுகாப்பு தொடர்பில் எமக்கு எந்த சந்தேகமும் இருக்கக் கூடாது" - என்றார். (ஐ)

## புதிய சட்ட முறை...

தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற தமிழ் அரசு கட்சியின் முக்கியஸ்தர்களின் கூட்டத்தின் பின்னர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் வழக்கு தவணை அடுத்த 19ஆம் திகதி வருகிறது. இதனால், தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுவும் கட்சி சம்பந்தமான வழக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினரும் ஒன்றாகக்கூடி கலந்துரையாடினோம். நாம் ஒவ்வொருவரும் எமது நிலைப்பாட்டுக்கு அமைய மறுமொழிகளை தாக்கல் செய்த பிறகு வழக்கை முடிவுறுத்துவதற்கான ஒரு யோசனை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இந்த யோசனையின் விவரங்களை நாங்கள் மத்திய செயல்குழுவில் கூடித் தீர்மானிப்போம். ஆனால், பொதுவாக வழக்கை எந்த அடிப்படையில் முடிவுறுத்தலாம் என்பது இணக்கம் காணப்பட்டுள்ளது.

8 எதிராளிகளையும் 19 ஆம் திகதி வழக்கில் அழைப்பார்கள். கடைசியாக இடையீட்டு மனுவை முன்வைத்த ஜீவராஜா என்பவரின் இடையீட்டு மனு தொடர்பான விடயமும் 19 ஆம் திகதி இருக்கின்றது. இதனால், வழக்கு தள்ளிப் போகக்கூடிய சில சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். ஆனால், அதைத் தவிர நாங்கள் அனைவரும் மறுமொழி அணைத்துள்ளோம். இப்போது குடியியல் நடவடிக்கைகள் சட்டமூலத்தில் செய்யப்பட்ட திருத்தத்துக்கு அமைவாக வழக்கு விளக்கத்துக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாக சட்டத்தரணிகள் சகிதம் நீதிபதியோடு ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும் எனச் சொல்லப்பட்டுள்ளது. அந்த இடத்தில்தான் வழக்கை சுமுகமாகத் தீர்க்கக்கூடிய வழிகள் என்ன என்பதை நீதிபதியோடு இணைந்து பேசுவதற்கான ஒரு சந்தர்ப்பம் சட்டப்படியாக இப்போது வழங்கப்பட்டுள்ளது.


எதிர்வரும் 19 ஆம் திகதி மறுமொழி வழங்கிய பின்னர் ஒரு திகதியைத் தீர்மானித்து கலந்துரையாடலை மேற்கொண்டு வழக்கை என்ன மாதிரி முடிவுறுத்தலாம் என்ற தீர்மானத்துக்கு வரலாம். அதற்கு முன்னர் மத்திய செயல்குழு கூடி எடுக்கப்போகும் தீர்மானம் தொடர்பாகக் கலந்துரையாடி இணக்கப்பாட்டைத் தெரிவிக்கும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# முஸ்லிம் மக்களின் மத்தியில் எமக்கான ஆதரவு அதிகரிப்பு

## அநுரகுமார திஸநாயக்க சொல்கிறார்



கொழும்பு, ஜூலை 15

**தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் ஆதரவு இல்லை என்பது போட்டி அரசியல் கட்சிகளால் பரப்பப்படும் மற்றுமொரு கதையே - முஸ்லிம் சமூகத்தினர் மத்தியில் எமக்கான ஆதரவு அதிகரித்துள்ளது. தெற்கிலும் கிழக்கிலும் எம் தொடர்பில் அவர்கள் பெரும் ஆர்வத்தை வெளிப்படுத்தி வருகின்றனர்.**

- இவ்வாறு ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்குக்கு எங்கள் செய்தியை மேலும் உரத்தவிதத்தில் தெரிவிக்கவேண்டியது அவசியம் என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம் என்று கொழும்பு ஆங்கில நாளிதழுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பல தனிநபர்களும் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். ஒரு முகாம் கட்சிகளின் நிறங்களுக்கு அப்பால் ஊழலையும் குடும்ப அரசியலையும் உயர் பதவிகளுக்கு குடும்ப உறுப்பினர்களும் சகாக்களும் நியமிக்கப்படுவதையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது என தெரிவித்துள்ளார்.

இந்த குழுவினர் தங்கள் நன்மைக்காக மக்களின் பணத்தை சூறையாடியவர்கள் என குற்றம்சாட்டப்பட்டவர்கள், இவர்கள் ஊழல் வர்த்தகர்கள் மற்றும் இந்த அரசியல்வாதிகளுடன் இணைந்து செயல்படும் சட்டத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தும் உயர் அதிகாரிகளின் உதவியுடன் இதனை முன்னெடுத்தவர்கள்எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த ஊழல் மிகுந்த அரசியல் கட்டமைப்பு சட்டத்துக்கு மேலானதாக தன்னை ஸ்தாபித்துள்ளது. இது அப்பாவி மக்களை துன்புறுத்துவது மற்றும் அவர்களின் அமைதியான வாழ்க்கையை பறிப்பதால் சமூகத்துக்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலாக மாறியுள்ளது - என்றும் கூறினார்.

(ஐ)




## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் போராட்டம்!

வவுனியா, ஜூலை 15

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் நேற்று முன்தினம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வவுனியா மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தொடர் போராட்டம் ஆரம்பமாகி 2 ஆயிரத்து 700 நாட்கள் நிறைவை முன்னிட்டே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பிரதான தபால் நிலையத்துக்கு அருகாமையிலுள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்ட கொட்டகை முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தியவாறும் எங்கே எங்கே உறவுகள் எங்கே, கையில் ஒப்படைக்கப்பட்ட உறவுகள் எங்கே என்று கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

## ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளது

கொழும்பு, ஜூலை 15

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாத இறுதியில் இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்பு 564. 2 கோடி அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. இதில் சீன மக்கள் வங்கியின் நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டமும் அடங்குகிறது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதேநேரம் இந்த மாதத்தில் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 6.8 சதவீதத்தால் வலுவடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## முச்சக்கரவண்டி தீப்பற்றி எரிந்தது

வடமராட்சி, ஜூலை 15

விபத்துக்குள்ளான முச்சக்கர வண்டி திடீரெனத் தீப்பிடித்து முற்றாக எரிந்து நாசமானது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய கல்லூரிக்கு முன்பாக முன்பாக இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் நிரப்பிய பின்னர் அதனை செலுத்திக் கொண்டிருந்தபோதே முச்சக்கரவண்டி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதன்போது, சாரதி தூக்கிவீசப்பட்டார். இந்த நிலையில் முச்சக்கரவண்டி தீப்பற்றி எரிந்தது.

எனினும், தீயை அணைக்க அங்குநின்றவர்கள் முயன்றபோதும் அது பலனளிக்கவில்லை. சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ- 02)



## 1700 ரூபாய் சம்பளம் கோரி தொழிலாளர்கள் போராட்டம்!

நுவரெலியா, ஜூலை 15

தோட்ட தொழிலாளர்களின் 1700 ரூபாய் சம்பளம் இதுவரை கிடைக்கவில்லை. உடனடியாக சம்பளத்தை வழங்க வேண்டும். இதற்கு ஒத்துழைப்பு வழங்காத கம்பெனிகள் வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று தலவாக்கலை நானுஓயா தோட்டத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, பதாகைகளை ஏந்தியவாறும் சம்பள உயர்வு தொடர்பான கோஷங்களை எழுப்பியவாறும் 80இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது நிலையை புரிந்துகொண்டு ஊதியமாக வழங்க வேண்டிய 1700 ரூபாய் சம்பளத்தை உடனடியாக வழங்குமாறு போராடிய மக்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டாம் என்று தோட்ட நிர்வாகம் அச்சுறுத்துவதாகவும் தெரிவித்தனர். (ஐ)

## மனித எலும்புக்கூடுகள் கொழும்பில் மீட்கப்பட்டன

கொழும்பு, ஜூலை 15

கொழும்பு துறைமுக பழைய செயலகத்துக்கு அருகில் எஸ். ஏ. ஜி. கே. நுழைவாயிலுக்கு அருகில் கட்டுமானத்துக்காக சீன நிறுவனமொன்று மேற்கொண்ட அகழ்வின் போது பல மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன என்று கொழும்பு துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 6 அடி ஆழத்தில் இந்த எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்றும் இவை பல வருடங்கள் பழையன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## தொழிற்சங்க போராட்டங்கள் ஜனாதிபதி தேர்தல் வரை இல்லை!

கொழும்பு, ஜூலை 15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வரையில் தொழிற்சங்க போராட்டங்கள் முன்னெடுக்கப்படாது என்று தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு நிதி இல்லை எனக் கூறும் ஜனாதிபதி அரசாங்க சேவையில் ஈடுபட்டு வரும் ஒரு தரப்புக்கு மட்டும் கொடுப்பனவு வழங்குவதாக தேசிய மக்கள் சக்தியை குற்றம் சுமத்தியுள்ளது. அரசாங்க சேவையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி செயல்பட்டு வருகிறார் என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், இதனால் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் வரையில் வேலை நிறுத்த போராட்டங்களை முன்னெடுக்காதிருக்க தேசிய மக்கள் சக்தியின் தொழிற்சங்க பிரிவு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவாகும் வரையில் வேலை நிறுத்த போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படாது என்றும் அவர் கூறினார். (ஐ)

## விபத்தில் இளைஞர் பலி!

கொழும்பு, ஜூலை 15

பஸ் தரிப்பு நிலையத்துடன் மோட்டார் சைக்கிள் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

மொரந்துடுவ - பண்டாரகம வீதியில் உள்ள தெல்கட சந்தியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் 19 வயது இளைஞர் உயிரிழந்தார்.

உணவு நிறுவனம் ஒன்றில் சமையல் கலைஞராக பணியாற்றிய அந்த இளைஞர் பிறந்தநாள் விழாவில் சமைத்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org